ஆரம்பம் 1969 பெப்ரவரி

அறிவோம்.. அறிவிப்போம்...

# தொண்டன்

சமய - சமூக - இலக்கிய வெளியீடு

ஒக்டோபர் - நவம்பர் - டிசம்பர் - 2025


"குளிர்ந்த பானம்
கோடைக் காலத்தில்
எப்படி இருக்குமோ அப்படியே
உண்மையான தூதர் தம்மை
அனுப்பினவருக்கு இருப்பார்;
அவர் தம் தலைவருக்குப்
புத்துயிரளிப்பார்."

நீதிமொழிகள் 25:13











ISSN : 2012-6352 Reg.No.187317

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

அறிவோம் ... அறிவிப்போம் ...


ஆரம்பம் - 1969 பெப்ரவரி

மலர் - 55 ஒக்டோபர் நவம்பர் டிசம்பர் 2025 இதழ் - 04

- **ஆசிரியர் :**
  அருட்தந்தை.
  கிளமென்ற் V. அன்னதாஸ்
- **துணையாசிரியர் :**
  திரு. பெஸ்லியோ வாஸ்
- **நூல் வடிவமைப்பு :**
  திருமதி. சுபாஜெனி சங்கர்

**வெளியீடு**

சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். - 44,
மட்டக்களப்பு.

**பதிப்பகம்**

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.



**SOCIAL COMMUNICATIONS CENTRE**

P.O. BOX - 44
BATTICALOA.
TEL : 065 2226486
E-MAIL : battiscc@gmail.com



விலை : 100/=
ஆண்டுச் சந்தா : 1700/=
(தபாற் செலவு உட்பட)


## அன்புடன் உங்களோடு ...

நமது நாட்டின் அனர்த்தங்களின் காரணமாக அவசரகாலச் சட்டம் அமுலாகியது. பலர் உயிரிழந்துள்ளனர்; பலர் காணமாற் போயிலுள்ளனர்; பலர் வீடுகளையும் இழந்துள்ளனர்; உடுத்த உடையுடன் பலர் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். நீர் விநியோகம் தடைப்பட்டது. தொலைத் தொடர்புகள் ஸ்தம்பிதமானது. மண் சரிவினால் ஏற்பட்ட அனர்த்தங்கள், வெள்ளத்தினால் ஏற்பட்ட பரிதாப மரணங்கள். மரண ஓலங்கள்....

இந்த துன்பகரமான சூழ்நிலையில் திருவருகைக்காலத்தை ஆரம்பிக்கின்றோம். எமது மூதாதையர், காலத்தை கார், முன்பனி. பின்பனி, இளவேனில், முதுவேனில் என பல பருவங்களாக பிரித்து வைத்திருப்பது போல திருஅவையானது திருவழிபாட்டு காலத்தை பொதுக்காலம், தவக்காலம், பாஸ்கா காலம், திருவருகைக்காலம், கிறிஸ்து பிறப்புக்காலம் என வகுத்து இறைவனை வழிபட்டு வருகின்றது. திருவருகைக்காலம் மனமாற்றத்தின் காலம். இது நம்பிக்கையின் காலம். ஆண்டவரின் வழியை செம்மைப்படுத்தும் காலம். இலங்கை நாட்டில் வாழும் நாம் மதத்துவேஷம், இனத்துவேஷம், மொழித்துவேஷம், பிரதேசதுவேஷம் போன்ற தீய சிந்தனைகளிலிருந்து மனம்மாற வேண்டும். இன்று சமாதானத்திற்கும் ஒற்றுமைக்கும் குரல் கொடுக்க வேண்டிய மதவாதிகளே இன, மத துவேஷம் பேசவும் செயல்படவும், மக்களைப் பிரித்து வேடிக்கை பார்க்க ஆரம்பித்துள்ளார்கள். 'தெற்கிலிருக்கும் சிங்கள் மக்கள் வடக்கிலும் கிழக்கிலுமுள்ள தமிழ் மக்களை துண்டு துண்டாக வெட்ட வேண்டும்' என வாய் கூசாமல் பகிரங்கமாக உச்சரிக்கின்ற மத துறவிகளை சந்திக்கின்றோம். 'மதமே உன் பணி என்ன?' என்று இன்றைய சூழ்நிலை எம்மைச் சிந்திக்க வைக்கின்றது. 'சட்டம் அனைவருக்கும் சமம்' என்று மேடையில் கூறிவிட்டு சில அநீதிகளையும், அடக்குமுறைகளையும், பாரபட்சங்களையும், மத அடக்குமுறைகளையும் அட்டகாசங்களையும் கண்டும் காணாதவாறு மௌனம் சாதிப்பது ஏன்? 'உன் நிழலை நீ மாற்றவேண்டுமானால் உன்னையே நீ மாற்ற வேண்டும்' தீய சிந்தனைகளைக் கொண்ட மனங்கள் மாறவேண்டும்.

அண்மைக்கால அனர்த்தங்களில் குறிப்பாக மீட்புப்பணியில் ஈடுபட்டு உயிரிழந்த முப்படையினரை பாராட்டி நினைவுகூருவோம். இவர்கள் மீட்புப்பணியில் ஈடுபடும்போது சாதி, மதம், இனம் என கணிப்பிட்டு மீட்கவில்லை. இதுதான் மனித நேயம் 'Absence of War is not Peace' ஆயுதம் தாங்கிய யுத்தம் இல்லையென்றால் அமைதி வந்துவிட்டது என்று அர்த்தம் இல்லை. ஆயுதம் தாங்காமல், இரத்தம் சிந்தாமல் இன்று மக்கள் மத்தியில் பிரிவினைகளை விதைக்கின்ற மதவாதிகள் அரசியல் பிரதிநிதிகள், பொது மக்கள் மனம் மாற வேண்டும்.

முகம் இழந்த சமுதாயத்திற்கு தன் பிறப்பால் முகவரி தந்த முதல் மனிதன், எம் தெய்வம் இயேசுக் கிறிஸ்துவின் பிறப்பு விழாவைக் கொண்டாடும் நாம், சமாதானத்தின் தேவன், இவ்வுலகிற்கு கொண்டு வந்த அன்பு, இரக்கம், சமாதானம், நீதி, நேர்மை, சமத்துவம், சகோதரத்துவம், போன்ற விழுமியங்கள் நமது நாட்டிலும், எங்கெல்லாம் யுத்தங்களும், அனர்த்தங்களும், அடிமைத்தனங்களும், அநீதிகளும் தலைவிரித்தாடுகின்றதோ அங்கெல்லாம் துளிர்ந்திட இறைவேண்டல் செய்வோம்.

உங்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ், புதுவருட வாழ்த்துக்களை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றோம். - ஆசிரியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## உள்ளே...

1. யார் இந்த வானதூதர்கள்? ........................................ 02
2. சிம்மாசனம் ........................................ 04
3. உலகச் செய்திகள் ........................................ 07
4. பாலம் ........................................ 08
5. அருட்சகோதரி ராணி மரியா ........................................ 09
6. இலக்கிய மஞ்சரி ........................................ 10
7. சுமை ........................................ 12
8. கல்வி முறைகள் - ஆசிரியர் தரத்தை விட ........................................ 14
9. மாணவர் பக்கம் ........................................ 17
10. கடுகுக்கதை ........................................ 18
11. மறைமாவட்டச் செய்திகள் ........................................ 19
12. துருவ நட்சத்திரம் ........................................ 20
13. அரசியல் ........................................ 22
14. பார்வைகள் பலவிதம் ........................................ 24
15. உலக சுனாமி விழிப்புணர்வு தினம் ........................................ 25
16. வினாவிடைப் போட்டி ........................................ 26
17. திருஅவைச் செய்திகள் ........................................ 27
18. போட்டி முடிவுகள் ........................................ 28

ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யார் இந்த வானதூதர்கள்?

அருட்தந்தை கிளமென்ற் V. அன்னதாஸ்

**வானதூதரின் ஒன்பது குழுக்கள்**

வானதூதர்கள் இறைவனுக்கு ஊழியம் புரியும் ஆவிகள் என்கிறது எபிரேயர் 1:14. இவர்கள் விண்ணகத்தந்தையின் முன்னிலையில் எப்போதும் இறைவனைப் புகழ்ந்த வண்ணம் இருக்கிறார்கள். (மத் 18:10), எசாயா 6:3 இல் வானதூதர்கள் ஆண்டவரைத் தொடர்ந்து போற்றிக்கொண்டே இருக்கின்றார்கள் என்று சொல்லப்படுகின்றது.

**யார் இந்த ஒன்பது குழுக்கள்:**

யூத மற்றும் கிறிஸ்தவ மரபுகளின் அடிப்படையில் வானதூதர்கள் ஒன்பது குழுக்களாக உள்ளனர் என நம்பப்படுகின்றது. இவர்கள் அரியணையில் அமர்வோர், தலைமை தாங்குவோர், ஆட்சியாளர், அதிகாரம் கொண்டோர் என்று தூய பவுல் கொலோசேயருக்கு எழுதிய திருமுகத்தில் குறிப்பிடப்படுவோர் வானதூதர்களேயாவர். வானதூதர்கள் அவர்களின் பணிகளின் அடிப்படையில் மூன்று வட்டங்களாகப் பிரிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு வட்டத்திலும் மூன்று குழுக்களைச் சேர்ந்த வானதூதர்கள் இடம்பெறுகின்றனர்.

**முதல் வட்டம் :**

சுடரொளி வீசுவோர் (பக்திச்சுவாலகர்), புகழ்ந்தேற்றுவோர் (நாதகிருத்தியர்), அரியணையில் அமர்வோர் (பத்திராசனம்) என்று மூன்று குழுக்களை சேர்ந்தவர்கள் முதல் வட்டத்தில் இடம் பெறுகின்றனர். இந்த வானதூதர்கள் என்றும் கடவுளைப் போற்றி வணங்குகின்றனர்.

**1. சுடரொளி வீசுவோர் அல்லது சேராபீன்கள்** (Seraphim):

இவ் வானதூதர்கள், கடவுள் மீதான அன்பினாலும் ஆர்வத்தினாலும் பற்றி எரிந்து ஒளி வீசுகின்றனர். இவர்கள் ஆண்டவரின் அரியணையைச் சூழ்ந்து நிற்கின்றனர். சேராபீன்கள் ஒவ்வொருக்கும் ஆறு இறக்கைகள் இருக்கின்றன. ஒவ்வொருவரும் இரண்டு இறக்கைகளால் தம் முகத்தை மூடிக்கொண்டுள்ளனர். இரண்டு இறக்கைகளால் தம் கால்களை மூடி மறைத்திருக்கின்றனர். மற்றைய இரண்டால் பறக்கின்றனர். இவர்கள் எசாயா 6:1-7 இல் கூறியுள்ளது போல "படைகளின் ஆண்டவர் தூயவர், தூயவர், தூயவர் மண்ணுலகம் முழுவதும் அவரது மாட்சியால் நிறைந்துள்ளது" என்று உரத்த குரலில் கடவுளைப் புகழ்ந்து போற்றிக் கொண்டே இருக்கின்றனர்.

**2. புகழ்ந்தேற்றுவோர் அல்லது கெருபுகள்** (Cherubim):

இந்த வானதூதர்களை திருவெளிப்பாடு நூல், ஆண்டவரின் அரியணையைச் சுற்றிநிற்கும் நான்கு உயிர்களாக வெளிப்படுத்துகின்றன. இந்த உயிர்களுள் முதலாவது, சிங்கம் போலும் இரண்டாவது, இளங்காளை போலும் மூன்றாவது, மனிதன் போலும் நான்காவது, பறக்கும் கழுகைப் போலும் முக அமைப்பைக் கொண்டிருக்கின்றன. இவ்வுயிர்கள் ஒவ்வொன்றிற்கும் உள்ளும் புறமும் கண்கள் நிறைந்த ஆறு சிறகுகள் இருக்கின்றன. இதனை திருவெளிபாடு நூல் 4:6-8 வெளிப்படுத்துகின்றது.

இவர்கள் "தூயவர், தூயவர், தூயவர் எல்லாம் வல்ல கடவுளாகிய ஆண்டவர் இருந்தவரும்,



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இருக்கின்றவரும் வரவிருக்கின்றவரும் இவரே" என்று அல்லும் பகலும் இறை புகழ் பாடிக்கொண்டே இருக்கின்றனர்.

**3. அரியணையில் அமர்வோர்** (Thrones or Ophanim):

இந்த வானதூதர்கள் திருவெளிப்பாடு நூலில் 24 மூப்பர்களாக சுட்டிக்காட்டப்படுகின்றனர். இவர்கள் அரியணையில் அமர்ந்து கடவுளின் நீதிக்கும் ஆட்சியுரிமைக்கும் அடையாளமாகத் திகழ்கின்றனர். இவர்கள் முகம் குப்புற விழுந்து கடவுளை வணங்கிக்கொண்டே இருக்கின்றார்கள். திருவெளிப்பாடு நூலில் 11:16-18 இல் இவர்களின் உருவம் வளையத்தில் பல கண்கள் கொண்ட நெருப்பு சக்கரம் போன்று இருக்கும் என்று நம்பப்படுகின்றது. மேலும் விவிலியத்தில் தூய பவுலும் (கொலோசேயர் 1:16ல்) அரியணையில் அமர்வோர் பற்றி குறிப்பிடுகின்றார்.

## இரண்டாம் வட்டம்

ஒழுங்கு செய்வோர் (ஞானாதிக்கர்), புனிதத்தில் வல்லோர் (சத்துவகர்), அதிகாரம் கொண்டோர் (பலவந்தர்) என்ற மூன்று குழுக்களைச் சேர்ந்த வானதூதர்கள் இரண்டாம் வட்டத்தில் இடம் பெற்றுள்ளனர்.

**4. ஒழுங்கு செய்யும் வானதூதர்கள்** (Dominions or Hashmallim):

இவர்கள் பிரபுத்துவம் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் தங்களின் கீழுள்ள வானதூதர்களின் பணியை ஒழுங்குபடுத்துகின்றனர். அரிதான சில சந்தர்ப்பங்களில் மனித உருவில் தங்களை வெளிப்படுத்துவார்கள். இந்த ஞானத் திக்கரின் உருவம் இரண்டு சிறகுகளைக் கொண்ட மனிதரைப்போல இருப்பார்கள். அத்தோடு இவர்கள் செங்கோலில் வாளின் கைப்பிடியில் அதிகாரத்தை குறிக்கும் ஓர் ஒளிவட்டமும் காணப்படும்.

**5.புனிதத்தில் வல்லோர்** (Virtues or Strongholds):

"இந்த வானதூதர்கள் விண்ணகப் பொருட்களை கண்காணிக்கும் அதிகாரம் கொண்டவர்கள்; பிரபஞ்சத்தின் இயக்க முறைமைகளை இவர்கள் ஒழுங்குபடுத்தி பராமரிப்பார்கள்; இவர்கள் புனிதத்தில் வல்லவர்கள்; இவர்கள் புண்ணியத்தின் ஊற்றாகவும் திகழ்கின்றனர்" என்று டயோனைசியுஸ் புனைவு நூல் கூறுகின்றது.

**6. அதிகாரம் கொண்டோர்** (Powers or Authorities):

இவ் வானதூதர்கள் ஆட்சியாளர் என்ற வான தூதரோடு இணைந்து அதிகாரம் செலுத்துகின்றனர் என்று பவுல் திருத்தூதர் எபேசியருக்கு எழுதிய திருமுகத்தில் 3:10 இல் குறிப்பிடுகின்றார். இவர்கள் கடவுளுக்காக பிரமாணிக்கத்துடன் போரிட உருவாக்கப்பட்டவர்கள்.

## மூன்றாம் வட்டம்

ஆட்சியாளர் (பிரதாமிகர்), தலைமை தாங்குவோர் (அதிதூதர்), தொடர்பு கொள்வோர் (தேவதூதர்) என்ற மூன்று குழுக்களைச் சேர்ந்த வானதூதர்கள் இந்த மூன்றாம் வட்டத்தில் இடம் பெறுகின்றனர்.

**7. ஆட்சியாளர்** (Principalities or Rulers):

இவர்கள் அதிகாரம் கொண்டோர் என்ற ஆட்சியாளர்களோடு இணைந்து செயல்படுகின்றனர். ஆட்சியாளர், தலையில் மகுடம் தாங்கியவர்களாகவும் கையில் செங்கோல் கொண்டவர்களாகவும் இருப்பர். அதிகாரம் கொண்டோரின் கட்டளைகளை நிறைவேற்றுவதும், பூவுலகத்திற்கு ஆசிகளை வழங்குவதும் இவர்களது பணி ஆகும். இவர்கள் மக்களை கண்காணித்து கற்பிப்பவர்களாகவும், பாதுகாப்பவர்களாகவும் இருக்கின்றனர். மனிதனின் அறிவியல் மற்றும் கலை ஆர்வத்தை தூண்டுபவர்களாகவும் செயல்படுகின்றனர்.

**8. தலைமைதாங்குவோர்** (Archangel):

இந்த வானதூதர்கள் தீமைகளுக்கு எதிராக போர் புரிபவர்களாக செயல்படுகின்றனர். தலைமை தாங்கும் வானதூதர்களின் எண்ணிக்கை ஏழு என்கிறது திருவெளிப்பாடு புத்தகம் 3:1. கத்தோலிக்க மரபின்படி மிக்கேல், கபிரியேல், ரபாயேல் ஆகிய மூவரும் முக்கியமான அதிதூதர்கள் ஆவர்.

**9. தொடர்பு கொள்வோர்** (Angels or Malak Him):

இவர்கள் மக்களுக்கு இறை செய்தியை வழங்கும் தூதுவர்கள். இவர்கள் மனிதரின் பாதுகாவலர்களாகச் செயல்படுகின்றனர். தலைமை தாங்குவோரும் தொடர்பு கொள்வோராக செயல்படுவதுண்டு. இதற்குச் சான்று, அதிதூதரான கபிரியேல் கன்னிமரியாவுக்கு கிறிஸ்துவின் பிறப்புச் செய்தியை அறிவித்ததாகும். ...

– 23ம் பக்கம் பார்க்க .....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தினமும் 5 நிமிடம் பிந்திவரும் சோமபாலாவுக்கு வயது முப்பதுக்குள்தான் இருக்கும். ஆறடி உயரம் இருப்பான். அடிமரக்குத்திகளை தோளிலே அனாயாசமாக தூக்கி எறிவதை கண்டிருக்கிறேன். அப்படிச் செய்யும்போது அவன் புஜத்தில் திரளும் தசைநார்கள் முறுகி உருண்டு பெருகி புஜத்தை உடைத்து வெளியே வந்துவிடுமோ என்ற அச்சத்தையூட்டும். கைகட்டி முன்னே நின்றான். ஆசனத்தில் உட்காரமாட்டான். அவன் கையில் பிடித்திருந்த அட்டையை நீட்டினான். ஐந்து நிமிடம் பிந்தி வந்ததால் வருகை நேரம் அட்டையில் சிவப்பாக அச்சடிக்கப்பட்டிருந்தது.

ஆயிரம் பேர் வேலைசெய்யும் அந்த தொழிற்சாலையில் 6 மாதம் முன்னர்தான் வருகை பதிவு மணிக்கூடுகள் இரண்டை நிறுவியிருந்தார்கள். தொழிலாளிகள் நிரையாக வந்து தங்கள் தங்கள் அட்டைகளை மணிக்கூட்டில் செருகி வருகை நேரத்தை பதிவுசெய்வார்கள். 5 நிமிடம் பிந்தி வந்தால் 15 நிமிடக் கூலி வெட்டப்படும். 15 நிமிடம் பிந்தி வந்தால் அரைமணி நேரக் கூலி. அரை மணி பிந்தி வந்தால் ஒரு மணி நேரக் கூலி. ஒரு மணி நேரம் பிந்தி வந்தால் தொழிலாளி அன்று உள்ளே அனுமதிக்கப்படமாட்டார்.

சோமபாலா தினமும் பிந்தி வந்ததால் என் முன்னே நின்றான். அந்த தொழிற்சாலை கொழும்பில் இருந்து 125 கி.மீட்டர் தூரத்தில் உள்ள ஜிந்தோட்ட என்னுமிடத்தில் இருந்தது. முழுக்க முழுக்க சிங்களப் பிரதேசம். அங்கே வேலை செய்தவர்களில் நான் ஒருவனே தமிழ் ஆள். நூறு சிங்கள வார்த்தைகளுக்கு மேலே எனக்கு பேசத் தெரியாது. நான் சொல்ல வேண்டியதை அந்த நூறு வார்த்தைகளுக்குள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுருக்கி சொல்லிவிடவேண்டும். “நீ பிந்தி வருவதால் உன் கூலியை வெட்டிவிடுகிறார்களே. வீட்டிலேயிருந்து ஐந்து நிமிடம் முந்தி புறப்பட்டால் போதுமே. என்ன பிரச்சினை?” என்றேன். சோமபாலா குனிந்து பார்த்தபடியே நின்றான். ஏதோ பேசவிரும்பினான் ஆனால் அவனால் முடியவில்லை. அத்தனை பலசாலியான ஒருவன் என் முன்னே கூனிக்குறுகி நின்றது எனக்கே சங்கடமாக இருந்தது. “சரி போ” என்றதும் அவன் போனான். இன்னொரு தொழிலாளி கழுத்தை வளைத்து தலையை மட்டும் நீட்டிப் பார்த்தான்.

ளின் மணம் அங்கே சூழ்ந்திருந்தது. பிரம்மாண்டமான மெஷின்களில் மரங்கள் சுழல, அவற்றை கூரிய கத்திகள் ஒரு பக்கத்தில் செதுக்க, மறுபக்கத்தில் அவைகள் நீண்ட மரத்தாள்களாக விழுந்தன. இந்த இழைகளை ஒன்றுக்கொன்று குறுக்காக வைத்து 3,5,7,9 மரத்தாள்கள் என ஒட்டி வெவ்வேறு தடிப்புகளில் பலகைகள் செய்யப்பட்டன. அவை வழுவழுப்பாகவும் இலேசாகவும் இருக்கும். ஆனால் சாதாரண மரப் பலகைகளிலும் பார்க்க வலுவானவை. ஆகவே விற்பனை அமோகமாக இருந்தது.

இக்கதையாசிரியரைப் பற்றி ....



1937 சனவரி 19ல் இலங்கை யாழ்ப்பாண நகருக்கு அருகாமையில் உள்ள கொக்குவில் கிராமத்தில் பிறந்தவர் அ. முத்துலிங்கம். அப்பாத்துரை, ராசம்மா தம்பதிகளுக்கு பிறந்த ஏழு பிள்ளைகளில் இவர் ஐந்தாமவர். கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பயின்ற இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் அறிவியல் படிப்பை முடித்தபின் இலங்கையில் பட்டயக் கணக்காளராகவும், இங்கிலாந்தின் முகாமைத்துவக் கணக்காளராகவும் பட்டம் பெற்றவர். பணி நிமித்தமாக பல நாடுகளுக்கு பயணித்திருக்கும் இவர் ஏறத்தாழ இருபது ஆண்டுகள் உலக வங்கியிலும், ஐக்கிய நாடுகள் அவையின் OPS பிரிவிலும் முக்கியமான பதவிகளில் பணியாற்றி தற்சமயம் புலம் பெயர்ந்து தன் மனைவி கமலரஞ்சினியுடன் கனடாவில் வசித்து வருகிறார். பிள்ளைகள் இருவர் : சஞ்சயன், வைதேகி.

அ. முத்துலிங்கம், பேராசிரியர் க. கைலாசபதியால் எழுத்துலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்டவர். இலங்கை தினகரன் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற ‘அக்கா’ சிறுகதையை தலைப்பாகக் கொண்ட இவரின் முதல் தொகுப்பு திரு க. கைலாசபதியின் அணிந்துரையுடன் 1964ல் வெளியானது. நீண்டகால இடைவெளிக்கு பிறகு 1995ல் மறுபடியும் எழுதத் தொடங்கி சிறுகதைகள், கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள், நேர்காணல்கள், புத்தக மதிப்புரைகள், நாடக, சினிமா விமர்சனங்கள் என்று எழுதி வருகிறார். இருபதுக்கு மேற்பட்ட வெளிநாட்டு ஆங்கில எழுத்தாளர்களுடன் இவர் நடத்திய நேர்காணல் கட்டுரைகள் தொகுப்பாக விரைவில் வெளிவர இருக்கிறது. தற்போது, கனடாவில் பதிவு செய்யப்பட்ட தமிழ் இலக்கியத் தோட்டம் (Tamil Literary Garden) என்னும் அறக்கட்டளை குழுமத்தில் முக்கிய உறுப்பினராக செயலாற்றுகிறார்.

2015ல் இருந்து ஹார்வார்டு தமிழ் இருக்கை அமைப்பின் உறுப்பினராகச் செயலாற்றுகிறார். 2018 மார்ச் 5ம் தேதி ஹார்வார்டு விதித்த இலக்கான 6 மில்லியன் டொலர்கள் உலகம் முழுவதிலுமிருந்து நன்கொடையாக திரட்டப்பட்டு விட்டதால் தமிழ் இருக்கை உறுதியானது.

நவீன தமிழ் இலக்கியத்திற்கு ஈழத் தமிழ் தந்திருக்கும் முக்கியமான கொடை என்று அ.முத்துலிங்கம் படைப்புகளைச் சொல்லலாம். அவர் கதைகளில் காணப்படுவது வெவ்வேறு தேசங்கள், வெவ்வேறு கலாச்சாரங்கள், வெவ்வேறு மனிதர்கள். ஆனால் தமிழ் வாசகருக்கு அந்நியப்படாமலும், தீவிரம் சிதைக்கப்படாமலும் அப்புனைவுகள் படைக்கப்பட்டிருக்கின்றன. நாம் அறிந்த உலகங்களுக்கு நாம் அறியாத பாதைகளில் அவை எம்மை இட்டுச் செல்கின்றன; பிரமிக்கவைக்கின்றன. அவரின் பார்வை அதிசயமான கூர்மை கொண்டது. வார்த்தைகளே தன்னை வசீகரிப்பதாக, சிந்திக்க வைப்பதாக, ஆட்கொள்ளுவதாகச் சொல்லும் அ.முத்துலிங்கத்தின் எழுத்தும் நம்மை அதேவிதமான பாதிப்புக்கு உள்ளாக்குகிறது.

– விக்கிபீடியா

யாரோ பக்கவாட்டில் பிதுக்கி பிதுக்கி நேராக்கியது போல உயரமாக இருந்தான். வருகை அட்டையுடன் உள்ளே நுழைந்தான்.

அரசாங்கத்துக்கு சொந்தமான அந்த ஒட்டுப் பலகை நிறுவனம் 20 வருடங்களாக இயங்கியது. தினமும் பெரிய பெரிய லொறிகளில் காட்டு மரங்கள் வந்து குவிந்தன. எந்த நேரமும் மரங்க

தொழிற்சாலையில் வேலை செய்தவர்களில் அதிகமாகப் படித்தவன் சோமபாலா. ஆனால் அவன் மெஷின்களில் வேலை செய்வதில்லை. மரங்களை தரம் பிரிக்கும் பகுதியிலோ மற்றும் மரங்களை மெஷினுக்குள் செலுத்தும் பகுதிகளிலோ இல்லை. ஒட்டும்பகுதியிலும் மினுக்கும் பகுதி யில்கூட அவனுக்கு வேலை கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத் துண்டு கழிவுகளை கூட்டி அள்ளும் பகுதியில் வேலை செய்தான். ஆனால் அவனால் நூற்றுக்கு மேற்பட்ட மரங்களை அடையாளம் காணமுடியும். அவற்றின் குணங்களும் உபயோகங்களும் அவனுக்கு மனப்பாடம். தச்சு வேலையின் நுட்பங் களை அறிந்தவன். அவனுடைய பரம்பரைத் தொழில் அது. ஆனாலும் அங்கே ஆகக் கடை நிலையில் எல்லோருடைய ஏளனத்தையும் சகித்துக்கொண்டு வேலை செய்தான். .

ஒருநாள் சோமபாலா அரைமணி நேரம் பிந்தி வந்ததால் அவனுடைய மேலாளர் அவனை மோசமாகத் திட்டினார். "உன் கூலியைத்தான் தண்டனையாகப் பிடிக்கிறார்களே, எதற்காக அவர் உன்னைத் திட்டினார்?" என்று கேட்டேன். "நான் கின்னர சாதி. ஆகக் கீழான சாதி. அப்படித் தான் திட்டுவார்கள்" என்றான். "உனக்கு பழகி விட்டதா?" என்றேன். கிட்ட வந்து காதோடு "தொழிற்சாலையின் பொது மேலாளர் என்ன சாதி தெரியுமா" என்றான். "எனக்குத் தெரியாது" என்றேன். "தேவ சாதி" என்றான். "அப்படி என்றால்...?", "எங்கள் பழைய அரசர்கள் எல்லாம் தேவ சாதி. ஆக உயர்ந்தது" என்றான். பின்னர் இருபக்கமும் பார்த்துவிட்டு "உங்களுக்கு ஒரு விசயம் தெரியுமா? எங்கள் பொதுமேலாளர் ஒரு சிம்மாசனம் செய்கிறார்" என்றான். "சிம்மாசனமா எதற்கு?" "உட்காரத்தான்....".

"பொது மேலாளருக்கு தன் முன்னோர்கள் அமர்ந்ததுபோல ஒரு சிம்மாசனத்தில் உட்கார வேண்டும் என்ற ஆசை தோன்றிவிட்டது. காட்டி லிருந்து வந்து இறங்கும். மரங்களில் சிறந்த மரங்களைத் தேர்ந்தெடுத்து நல்ல சிம்மாசனம் ஒன்றை உருவாக்கச் சொல்லி கட்டளையிட்டிருந்தார். அதற்காகத் தேர்வு செய்யப்பட்டவன் துணிந்து பொய் பேசுகிறவன். அவனை நம்ப முடியாது. அன்னாசிப்பழம் தலையில் விழுந்தது என்று கூசாமல் சொல்வான். அவனுக்கு தச்சுவேலையும் தெரியாது, சிற்ப வேலையும் தெரியாது. பல மரங்களைப் பாழாக்கிவிட்டான். சிம்மாசனத்தின் கால்கள் சிங்கத்தின் முன்னங்கால்கள்போல இருக்கவேண்டுமென்று பொது மேலாளர் சொல்லி யிருந்தார். அவனால் கழுதைக் காலைக் கூட உருவாக்க முடியாது".

"ஒன்றிரண்டு மரங்கள் பொதுமேலாளர் சார்பில் வீணானால் என்ன? பெரிய நட்டம் ஏற்பட்டுவிடுமா?". "நீங்களே இப்படி பேசுவது ஆச்சரியமாக இருக்கிறது. அவர்கள் வீணாக்குவது சாதாரண மரங்கள் அல்ல. அபூர்வமான மரங்கள். முன்பு எங்களை ஆண்ட வெள்ளைக்காரர்கள் கலுமெதி ரிய மரங்களை கப்பல் கப்பலாக இங்கிலாந்துக்கு கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். நூறு வயது மரங்களை அவர்கள் வெட்டியபோது அவற்றுக்கு ஈடாக புதிய மரங்களை நடவில்லை. இங்கிலாந் திலே இந்த மரங்களில் செய்த மேசைகளிலும் நாற்காலிகளிலும் அமர்ந்து உணவருந்துகிறார்கள். இப்படியான மரம் அவர்களுக்கு எங்கேயும் கிடைக்காது. அத்தனை வழுவழுப்பானது; வலுவானது. மினுக்கினால் அதில் முகம் பார்க்கலாம். அவர்கள் அழித்தது போதாதென்று வேலை தெரியாதவர்களும் அழிக்கிறார்கள். கலையம்சம் சிறிதும் இல்லாதவர்கள் மரம் வெட்டும் வேலையை செய்யலாம்; மரத்தில் ஒன்றை உருவாக்கும் வேலையைச் செய்யக் கூடாது. மூளைக்குள் ஏதாவது இருந்தால்தான் அது கலையாக மரத்தில் வெளிப்படும்".

சோமபாலா இத்தனை கோபப்பட்டு நான் பார்த்ததில்லை. "என்ன மரம் சிம்மாசனத்துக்கு உகந்தது என்று நீ நினைக்கிறாய்?" "முன்பு ஒரு வெள்ளைக்கார கவர்னர் இருந்தான். அவன் பெயர் சேர் ரொபர்ட் பிரௌண்றிக். இவன் இங்கிலாந்துக்கு காலண்டர் மரங்களை கடத்திப் போய்விட்டான். அவன் வீட்டுக் கதவுகளைக்கூட இந்த வகை மரத்தில்தான் செய்தானாம். அதிலும் மோசமாகவல்லோ இப்பொழுது நடக்கிறது. மரக் கழிவுகளை தினமும் கூட்டி அள்ளும் வேலைசெய்யும் என்னால் இவர்கள் செய்யும் அநியாயங்களை பார்த்துக்கொண்டு இருக்க முடியவில்லை" நான் கேட்ட கேள்விக்கு அவன் பதில் சொல்லவே இல்லை.

"மரங்களில் இத்தனை நேசம் வைத்திருக்கும் நீ எப்படி இந்தத் தொழிலுக்கு வந்தாய்?" "வேறு என்ன? மரப்பற்றுத்தான். ஒவ்வொருநாளும் என்னால் மரங்களுடன் வாழமுடிகிறது. அவற்றின் சரித்திரத்தை படிக்கிறேன். எத்தனை ரகங்கள். 60 அடி, 70 அடி உயரமான மரங்கள். 20 அடி சுற்றளவான மரங்கள். 100 வயது வாழ்ந்த மரங்கள். ஆனால் இவை எல்லாம் அழிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுவதை என்னால் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. இந்த வேலை எனக்கு பொருத்தமானது இல்லை. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" "நீ அநேக கேள்விகள் கேட்கிறாய்...". "கேள்விகள் தான் முக்கியம். பதில்கள் அல்ல... உலகம் முன்னேறுவது கேள்விகளால்தான்". "என்ன செய்யப் போகிறாய்?" "எனக்கு என்னவோ. மரத்தை அழித்துக் கிடைக்கும் காசில் வாழ்வது பிடிக்கவே இல்லை. ஒருநாள் வேலையை விட்டுவிடுவேன்...."

- தொடரும்.....

# உலகச் செய்திகள்!

## வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு மரண தண்டனை



கடந்த 1971-ம் ஆண்டு போரின்போது பாகிஸ்தானில் இருந்து பிரிந்து வங்கதேசம் தனி நாடாக உதயமானது. அப்போது, பாகிஸ்தான் இராணுவத்துக்கு எதிரான போரில் உயிர்த் தியாகம் செய்தவர்களின் வாரிசுகளுக்கு வங்கதேச அரசு 30 சதவீத இட ஒதுக்கீடு வழங்கியது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வங்கதேச மாணவர்கள் கடந்த 2024 ஜூன், ஜூலையில் பல போராட்டங்களில் ஈடுபட்டனர். போராட்டத்தை அடக்க அப்போதைய பிரதமர் ஷேக் ஹசீனா, போலீஸாருக்கு உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து நடந்த போலீஸ் தடியடி மற்றும் துப்பாக்கிச்சூடு சம்பவங்களில் சுமார் 1,400 மாணவர்கள் உயிரிழந்தனர். 25,000-க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். 2024 ஆகஸ்டில் மாணவர்கள் போராட்டம் தீவிரமடைந்தது. தலைநகர் டாக்காவில் உள்ள நாடாளுமன்றம், பிரதமரின் அதிகாரப்பூர்வ வீடு ஆகிய இடங்களை மாணவர்கள் முற்றுகையிட்டனர்.


நாட்டில் பதற்றம் அதிகரித்ததால், 2024 ஆகஸ்ட் 5-ம் தேதி ஷேக் ஹசீனா அங்கிருந்து வெளியேறி இந்தியாவில் தஞ்மடைந்தார். இந்த சூழலில், மாணவர்களுக்கு எதிரான வன்முறை தொடர்பாக வங்கதேசத்தின் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தில் கடந்த ஆண்டு ஆகஸ்டில் வழக்கு விசாரணை தொடங்கியது. 'மாணவர்களைக் கொலை செய்ய உத்தரவிட்டது, வன்முறையைத் தூண்டும் வகையில் பேசியது, ஆதாரங்களை அழித்தது, மாணவர் சங்கத் தலைவர் அபு சயீத்தை கொலை செய்ய உத்தரவிட்டது, டாக்காவின் சங்கர்புல் பகுதியில் 6 மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டது' என முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா மீது 5 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. இதுதொடர்பாக ஓராண்டுக்கும் மேலாக தீர்ப்பாயம் விசாரித்தது.

இந்நிலையில், வழக்கை விசாரித்த நீதிபதி கோலம் மோர்டுசா மஜூம்தார் தலைமையிலான 3 நீதிபதிகள் அமர்வு முக்கிய தீர்ப்பை வழங்கியது. ஷேக் ஹசீனா மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளில் 1, 2, 3-வது குற்றச்சாட்டுகள் நிருபணமாகியுள்ளன. இதற்காக அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. அவருடன் குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் உள்துறை அமைச்சர் அசாதுஸ்மான் கானுக்கும் மரண தண்டனை விதிக்கப்படுகிறது. முன்னாள் காவல் துறை தலைவர் சவுத்ரி அப்துல்லா அல் மமூன் அரசுத் தரப்பு சாட்சியாக மாறியுள்ளார். அவருக்கு 5 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படுகிறது.

"இந்து தமிழ் திசை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலம்

டெனிஎப்டன்

ஜனனத்தின் ஒரு கரை தொடங்கி
மரணத்தின் மறு கரை நோக்கி
பயணத்தினை தொடருமிந்த
பகலிரவு பாத யாத்திரைக்கு
பகுத்தறிவாளன் இட்ட பெயர் வாழ்க்கையோ...

தினத்தாள்கள் கிழியக் கிழிய
தேகமது வளர வளர தின்றும் கொழுத்தும்
தேகம் வளர்க்கும் மானுடமிங்கே
தரைமேல் கிடத்தி தவழ்ந்து தத்தி நடைவண்டி பழகி
மெல்ல அடியெடுத்து பின் வேகம் கூட்டி நடந்து
ஊர்விட்டு நாடு பறந்து உழைத்து களைத்து பின்
துணை கொண்டு பிள்ளைகள் கண்டு
உன் வயதடங்கி உடல் கூனி
ஒரு குழியில் வருமந்த முற்று....

பூகோளத்தை புரட்டிய ஆட்சியாளர்களை
விழுங்கியதும் அவர்களை வழங்கியதும்
இருவேறு இருட்டறைகளன்றோ
ஒளிபிறந்த இருட்டறை மரியாள் கொண்டாள்
கண் ஒளி மறைந்து விண் ஒளி தேடும்
யாத்திரையின் இருட்டறை அது மரணம் கொடுக்கும்

கார்த்திகை மார்கழி கற்பிக்கும் பாதையதை
மாற்றிட கூடாது மானிடா...
மார்கழியில் மரியாள் கொடுக்கவிருக்கும் மகத்துவம்
கார்த்திகை மரணம் புகட்டும் மனுதர்மம்
கார்த்திகையில் மனதால் செத்துப்போ
மார்கழியில் நீ மாடடை குடிலில் பிறந்து வா
கிறிஸ்தவன் அல்லவா நீ....

ஆடும் ஆட்டம் அடங்கிவிட்டால்
கூடும் கூட்டம் கூட்டினை புதைத்து
குழியினை மூடி நடுகல் ஒன்றினை நட்டு
நாலைந்து நாட்கள் விழி ஒழுக நீர்வடித்து
போகப்போக மறந்து பிழைப்பை தொடர
பின்னென்ன வழியென்று தேட தொடங்கி விடும்


புதுமகவொன்று கொண்டாலும் ஓரிரு மாதங்களில்
சட்டி தொட்டில் சவர்க்கார பரிசுகளோடு
சனக்கூட்டம் நின்றுவிடும்
ஜன்மமும் மரணமும் நீடித்த
கொண்டாட்டங்கள் கொண்டதல்ல மறவாதே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதை எளிமையாக்கு
மகோன்னத இறைவனை குடியேற்று
இறப்பில்லா வாழ்வு காண
இறந்துயிர்த்த இறைவனை உனக்குள் பிரசவி
நீயுமொரு மரியாளாக மனதில் மாறி நில்

மார்கழியில் அன்னை தருவாள் உலகின் ஒளி
உன் விடிவுக்கு அது ஒன்றே வழி
மரணத்தை வாழ்வாக்க நீ போடும் பாலம்
மரியாளின் மகவை உனக்குள் பிரசவிப்பது தான்




# அருட்சகோதரி ராணி மரியாவின் கதை

## 60-க்கும் மேற்பட்ட திரையரங்குகளில்

"தி பேஸ் ஆப் தி பேஸ்லெஸ்" (THE FACE OF THE FACELESS) என்ற அருட்சகோதரி ராணி மரியாவின் வாழ்க்கை மற்றும் தியாகத்தை மையமாகக் கொண்ட திரைப்படத்தின் தமிழ் மற்றும் தெலுங்கு பதிப்புகள், 2025 நவம்பர் 21 ஆம் தேதி முதல் 60-க்கும் மேற்பட்ட திரையரங்குகளில் வெளியிடப்பட உள்ளன. கேரளாவில் 1954 ஜனவரி 29ம் திகதி அன்று பிறந்த அருட்சகோதரி ராணி மரியா அவர்கள் மத்தியபிரதேச மாநிலத்தின் இந்தோர் மறைமாவட்டத்தில் சேவை செய்தார். புறக்கணிக்கப்பட்ட மக்களின் கல்வி, முன்னேற்றம் மற்றும் மரியாதைக்காக தன்னை அர்ப்பணித்தார். 1995 பெப்ரவரி 25ம் திகதி அன்று, 41 வயதில், ஏழைகளுக்காகச் செய்த பணியை எதிர்த்த நிலக்காரர்களால் நியமிக்கப்பட்ட கொலையாளியால் நாசன்பூர் மலை அருகே கொல்லப்பட்டார்.

திரைப்படத்தின் தமிழ் பதிப்பு முதன் முதலாக 2025 ஜூலை 8ம் திகதி அன்று தமிழ்நாட்டில் உள்ள பூண்டி மாதா பேராலயத்தில் நடைபெற்ற தமிழ்நாடு ஆயர்கள் பேரவைக் கூட்டத்தின் போது வெளியிடப்பட்டது. தமிழ்நாடு கத்தோலிக்க அருட்தந்தையர்கள் இதில் கலந்து கொண்டனர். இந்த தமிழ் மற்றும் தெலுங்கு பதிப்புகள் வெளிவருவதற்கு உதவிய மாதா டிவி நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி அருட்பணி டேவிட் ஆரோக்கியம் அவர்களுக்கு சிறப்பான நன்றிகள் தெரிவிக்கப்பட்டன.


ட்ரை லைட் க்ரியேஷன்ஸ் (Tri Light Creations) நிறுவனம் தயாரித்த இந்த திரைப்படம் இதுவரை 107-க்கும் மேற்பட்ட சர்வதேச விருதுகளைப் பெற்றுள்ளது. அத்துடன் ஆஸ்கார் விருதுகளுக்கும் தேர்வாகியுள்ளது. டாக்டர் ஷைசன் பி. உசேப் இயக்கத்தில், டாக்டர் சாண்ட்ரா டி சூசா ராணா தயாரித்த இந்த திரைப்படம், அருட்சகோதரி ராணி மரியாவின் தியாகத்துடன் மட்டுமல்லாது மன்னிப்பின் வெற்றியையும் வெளிப்படுத்துகிறது. அவரைக் கொன்ற நபர் ஆயுள் தண்டனை பெற்றிருந்தபோதும், அவரது குடும்பத்தினர் மன்னித்து, சிறந்த நடத்தை காரணமாக 2006 ஆம் ஆண்டு விடுதலையானார்.

"தி பேஸ் ஆப் தி பேஸ்லெஸ்" என்பது வெறும் ஒரு படம் அல்ல, அது தைரியம், நம்பிக்கை, மன்னிப்பு மற்றும் நீதி தேடல் ஆகியவற்றைப் பற்றி நாம் சிந்திக்க அழைக்கும் ஒரு அழைப்பு," என ட்ரை லைட் க்ரியேஷன்ஸ் நிறுவனத்தின் பொது தொடர்பு அலுவலர் ஜேசுராஜ் கூறினார்.

நாம் எதிர்கொள்ளும் சவால்களையும் உண்மைகளையும் புரிந்துகொள்ள, அனைவரும் இந்தப் படத்தைப் பார்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலக்கிய மஞ்சரி



■ ஆழியோன்


## 'புதுக்கவிதை வரலாறு'


இம்முறை 'தொண்டனின்' இலக்கிய மஞ்சரிக்காக ராஜமார்த்தாண்டன் எழுதிய 'புதுக்கவிதை வரலாறு' என்னும் ஆய்வு நூலின் சில பகுதிகளை எடுத்துப் பார்க்கவுள்ளோம். டிசம்பர் 2003இல் வெளிவந்த முதற்பதிப்புத்தான் எமது கரங்களுக்குக் கிடைத்தது.

ராஜமார்த்தாண்டன் அவர்கள் தமிழ் இலக்கியத்தில் முதுகலைப்பட்டம் பெற்றவர். அவர் தனது முன்னுரையில் ஈழத்து கவிதைகள் பற்றியும் குறிப்பிடுகின்றார்.

“இந்த வரலாற்று நூலில் ஈழத்துக் கவிதைப் போக்குக்கும் முக்கியத்துவம் கொடுத்து எழுத வேண்டும் என்பதே என் நோக்கமாக இருந்தது. தமிழகப் புதுக்கவிதை போலவே ஈழத்துப் புதிய கவிதையின் வளர்ச்சியும் சிற்றிதழ்கள் சார்ந்தே இருந்தது. எனக்கு 'மல்லிகை', 'அலை', 'புதுசு', 'தீர்த்த யாத்திரை' போன்ற இதழ்களே பார்வைக்கு கிடைத்தன. எனவே ஈழத்துப் புதுக்கவிதை வரலாற்றை இவ்விதழ்களில் வெளியான கவிதைகள், கவிதைகள் பற்றிய கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்டும் ஈழத்துக்கவிதை தொகுப்புக்கள், கா.சிவத்தம்பி, சி.சிவசேகரம், நு.்.மான், சண்முகம் சிவலிங்கம் போன்றோரின் கட்டுரைகள் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டுமே எழுதினேன். எனவே ஈழத்துக்கவிதை வரலாறு குறித்தான தகவல்களில் விடுபடல்கள் இருக்கலாம் ஆனால் திரிபுகள் இருக்காது என்பது உறுதி.

இந்த இடத்தில் வல்லிக்கண்ணனின் 'புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்', 'தமிழில் சிறு பத்திரிகைகள்' ஆகிய இரண்டு நூல்களையும் நான் குறிப்பிட்டாக வேண்டும். ஈழத்து புதுக்கவிதையின் ஆரம்பகாலம் குறித்தான தகவல்களை சேகரிக்க இவ்விரண்டு நூல்களும் பேருதவியாக இருந்தன....”




தனது நூலின் 169ம் பக்கத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

“ஒரு வகையில் தமிழகத்துப் புதுக்கவிதை போக்கும் இதற்கு விதிவிலக்கல்ல. அறுபதுகளிலும், எழுபதுகளிலும் புதுக்கவிதையின் பிரதான அம்சங்களில் ஒன்றாகக் கருதப்படும் படிமப் பிரயோகம் தொண்ணூறுகளின் கவிதைகளில் முக்கியத்துவமற்றுப் போனதைக் காணலாம். படைப்பிலக்கிய வளர்ச்சியில் இந்த மாற்றங்கள் தவிர்க்க இயலாதவை. தமிழகத்தின் புதுக் கவிதையின் பிரதான பலவீனங்களில் ஒன்றாக ஈழத்துக்கவிதை விமர்சகர்களும் முன்வைத்த செய்யுளின் அம்சமான ஓசை நயமின்மை அல்லது உரை நடைத்தன்மை எண்பதுகள் தொண்ணூறுகளில் ஈழத்துப் புதுக்கவிதையில் தவிர்க்க இயலாது இடம்பெற்றது. இந்த காலகட்டத்து ஈழத்துகவிஞர்கள், தமிழ்புதுக்கவிஞர்கள் அறுபதுகளில் செய்தது போல யாப்புவழிக் கவிதையின் குறைந்தபட்ச சார்பான ஓசை நயத்தைப் புறக்கணித்து எழுதத்தொடங்கினர். தமிழகத்துப் புதுக்கவிதைகளில் காணப்பட்ட குறைந்தபட்ட ஓசைநயம் கூட ஈழத்துக் கவிதைகளில் இல்லாமல் போயிற்று....

.... ஈழத்தைப் பொறுத்தவரையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பகாலப் புதுக்கவிஞர்களிடம் யாப்பு-யாப் பின்மை விடயத்தில் குழப்பம் இல்லை. மரபுக் கவிதையின் தொடர்ச்சியாகவே அவர்கள் புதுக் கவிதை உருவத்தையும் சப்தநயம் மிகுந்த செய்யுள் நடையையும் கையாண்டனர். மரபின் மீதான ஆழ்ந்த பிடிப்பே இதற்குக் காரணம். இதனால் மரபில் தொடர்ச்சியாக அவர்கள் புதுக் கவிதை முயற்சியை மேற்கொண்ட காலகட்டத்தில் அதாவது அறுபதுகளில் அவர்களின் கவிதைகள் பலவீனமாகவே வெளிப்பட்டன. பாரதி வளர்த்த சில கவிதைப் பண்புகளின் தோல்வியே பிச்சமூர்த்தி என்றால், அது தோல்வி நிகழாமல் இன்னொரு கட்டத்திற்கு உயர்த்திய வெற்றியே மஹாகவி எனலாம் என்னும் சண்முகம் சிவலிங்கத்தின் கணிப்பு (மஹாகவியின் 'கோடை' ப.72) கவிதையின் பொருளம்சம் சார்ந்தது மட்டு மல்ல, கவிதையின் உருவம் சார்ந்ததுமாகும். முருகையன், சண்முகம் சிவலிங்கம், சி.சிவசேகரம் போன்றவர்களுக்கு - எழுபதுகளுக்குப் பின்னர் கவிதையில் யாப்பு-யாப்பின்மை என்பது ஒரு பிரச்சினையாக இருந்துள்ளதை அறிய முடிகின்றது. 1994இல் 'வியூகம்' (கல்முனை சிறிலங்கா) சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் "என்னிடம் முன்பிருந்த யாப்பின் இறுக்கம் இப்போது இல்லாமல் போய்விட்டது, யாப்பில் என்னால் எழுதமுடியுமா? என்ற சந்தேகம் கூட வருகின்றது முன்னர் சிந்தனை யாப்பினூடாகவே வந்தது. இப்போது அப்படியில்லை. அது ஒரு முக்கியமான மாற்றம்" என்கின்றார் நு.்.மான். (மறுபிரசுரம் - காலச்சுவடு – அக்.94)


**குறிப்பு:-** நான் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று 'புதுக்கவிதை வரலாறு' என்னும் இவ்வாய்வு நூல் டிசம்பர் 2003இல் வெளிவந்தது. அதாவது 22 ஆண்டுகளுக்கு முன்னாள் (சுமார் கால் நூற்றாண்டுக்கு முன்னர்) எனவே இவ் புத்தகத்தை வாசிக்கும் போது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னரான காலகட்டத்திற்கு நாம் செல்லவேண்டும். தற்போதைய காலகட்டத்தில் ஈழத்து புதுக்கவிதைப் போக்குகள் பலபரிமாணங்களை எட்டிவிட்டன.

இந்நூலை வாசிக்க விரும்புபவர்கள்,
மட்டக்களப்பு பொது நூலகத்தில்
பெற்றுக்கொள்ளலாம். நூல் பதிவு இலக்கம்
LT003678

## ஹங்கேரி எழுத்தாளர் டேவிட் சலாய்க்கு புக்கர் பரிசு

இலக்கியத்துக்கான உயரிய கௌரவங்களில் ஒன்றாகக் கருதப்படும் புக்கர் பரிசு இங்கிலாந்து அரசாங் கத்தால் ஆண்டுதோறும் அறிவிக்கப்பட்டு வருகிறது. 1969-ம் ஆண்டு முதல் காமன்வெல்த் நாடுகளுக்கு வழங்கப்பட்ட இந்த விருது தற்போது உலக நாடுகளில் சிறந்து விளங்கும் எழுத்தாளர் களுக்கு அளிக்கப்படுகிறது. இந்நிலையில், இந்தாண்டுக்கான புக்கர் பரிசு ஹங்கேரி எழுத்தாளர் டேவிட் சலாய் எழுதிய பிளெஷ் என்னும் புனைவு நாவலுக்கு அறிவிக்கப்பட்டது.

இவர் கனடாவில் பிறந்து இங்கிலாந்தில் வளர்ந்து தற்போது ஹங்கேரி நாட்டின் குடியுரிமை பெற்று அங்கு வசித்து வருகிறார். இந்நூல் பூமிக்கும் மனிதனுக்கும் இடையிலான ஆத்மார்த்த உறவு குறித்து பேசப்படுவதாக அமைந்துள்ளது.




இலண்டனில் அவருக்கு புக்கர் பரிசுக்கான நினைவு சின்ன கோப்பையும், ரூ.55 இலட்சத்திற்கான (66 ஆயிரம் டாலர் கள்) காசோலையும் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுமை

– ந. பார்த்தீபன் –
ஓய்வுநிலை உப பீடாதிபதி
வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி.

"ஏன் .... கலாபூர்வன் .... அடிக்காதீங்க... அடிக்காதீங்க... நான் செத்துப்போவன்... எண்டு கத்துறவளிட்ட,

நீ செத்துப்போக வேணுமெண்டுதான்டி அடிக்கிறன்.... என்று சொல்றவனோடை எப்படி என்ரை பிள்ளையை விடுறது...."

என்று சொல்லிக் கண் கலங்கும் கணேசனின் கவலையை நினைக்க வேதனையாயிருக்கிறது.

நானும் மனைவியும் சேர்ந்து மாலை வேளையில் நடப்பது வழக்கம். அப்படி நடந்து வரும்போது எதேச்சையாக கணேசனைச் சந்தித்தோம்.

மிக நீண்ட காலத்தின் பின் சந்தித்தவேளை என் மனைவி கணேசனிடம்,

"மூத்த மகள் இப்ப எங்கே இருக்கிறாள்..." என்று கேட்க,

"அவள் எங்களோடைதான் ...." என்றார்.

அவளுடைய திருமணத்துக்குப் போய் வந்த பின் இப்போதுதான் கணேசனைச் சந்தித்ததால் ஆர்வமாக மனைவி கேட்டதை தனக்கு ஒரு ஆறுதல் வார்த்தையாக நினைத்து கணேசன் சொன்ன பதில்....

"ஏன் அவள் புருசனோடை போய் அவையின்ரை வீட்ல எல்லோ இருந்தவள்...."

"ஓ... அங்கை ஒரே அடியும் ஆக்கினையும் ... அதுதான் கூட்டிக்கிட்டு வந்திட்டம்...."

"ஏன்? என்ன பிரச்சினை?"

"அதொரு விசர்க்கூட்டம். அவள் தாய் ஒரு உதவாக்கரை. அவன்ர தம்பியும் மனிசியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலைச்சுப்போட்டு தாயோடுதான் இருக்கிறான்...."

"ஏன் நீங்க கல்யாணம் பேசேக்குள்ளை உறுகளை விசாரிக்கேல்லையோ?"

"இவள் என்ரை மனிசியின்ரை சொந்தக்காரங்கள் தானே...."

"அப்ப மனிசியின்ரை ஆக்கள் கதைக்கலாந்தானே?"

"இனிக் கதைச்சு ஒரு வேலையுமில்லை. நாங்க டிவோசுக்குக் கேட்டு இப்ப வழக்குப் போகுது...."

"ஐயோ... அவளுக்கு இப்ப எத்தினை வயசு... அதுக்குள்ள டிவோசோ?"

"எங்கடை லோயர் சொன்னார், நீ கும்பிட்ட பலன் பிள்ளையையும் தாயையும் காப்பாற்றினது. இல்லையென்றால் அவன் கொன்று போடுவான்..."

"பிள்ளையுமிருக்கே?"

"ஓ... ஒரு பொம்பிளைப்பிள்ளை. அதையும் தனக்கோ பெத்தனி... யாருக்கோ பெத்துப்போட்டு... என்று சொல்லி அடிச்சுப்போட்டு, இப்ப பிள்ளையைத் தன்னட்டைத் தரட்டாம் என்று நிக்கிறான்....."

"ஐயோ... தனக்குப் பிறக்கவில்லை என்று சொல்லிப் போட்டு... பிறகேன் பிள்ளையைக் கேட்கிறான்?"

"அதுதானே சொன்னேன்..., அவன் ஒரு மென்ரலென்று ..."

"சீச்சீ... அவன் காரியத்தோடதான் பிள்ளையைக் கேக்கிறான்..."

"ஓ... பிள்ளையைச் சாட்டாக வைச்சு சொத்தை அபகரிக்கலாமென நினைக்கிறான்...."

"அவள் தாயின் நோக்கமும் அதுதான்...."

"நீங்க டிவோஸ் எடுத்திட்டு அவளுக்கு வயசிருக்குதுதானே, கொஞ்சகாலம் போக அவளுக் கொரு கல்யாணத்தைப் கட்டி ......"

"அதைப் பிறகு பாப்பம். அவள் படிச்சிருக்கிறாள். இப்ப ஒரு வேலைக்கு அப்பிளை பண்றதுக்கு சோதனை எழுதி எட்டாவது றாங்கில பாஸ்பண்ணி றெயினிங் போறாள்...."

"நல்லதாய் போச்சு. அவள் ஏ.எல்லில் நல்ல றிசல்ற் எடுத்தவளெல்லே ..."

"அவன் கம்பஸுக்குப் போய் அவள் படிக்கிறதை விரும்பாமல் மறிச்சவனெல்லே...."

"இந்தக் காலத்தில இப்படியான மனப்பாங்குள்ள வனா? அப்பவே நீங்க யோசிச்சிருக்க வேணும்...."

"இப்ப எல்லாம் சரி. இனி அவள் தானுழைச்சு பிள்ளையையும் படிப்பிச்சு... தன்ரை காலில நிக்கட்டும்...."

"சே... அநியாயப்படுவான் .... அவள் வாழ்க்கை யையும் கெடுத்து... அவன் நல்லாயிருக்க மாட்டான்...."


"நான் முந்தின கணேசனாயிருந்தா... இப்ப நான் சிலுவை சுமக்கிறன். பழையமாதிரி இருந்தா சூலம் தூக்கியிருப்பன்....."

கணேசன் இந்துவாயிருந்து திருமணத்தின் பிறகு கிறிஸ்தவனாய் மாறியது ஞாபகத்துக்கு வருகிறது. சூலந் தூக்கிய கணேசனை நாங்கள் அறிவோம்.

பொம்பிளைப் பிள்ளையப் பெத்தா சூலத்தைக் கைவிட்டு சிலுவையைத்தான் சுமக்க வேண்டுமென் பது எந்த மதமென்றாலும் இனமென்றாலும் மாறா விதி என்பதைக் கணேசன் புரிந்துகொள்ளவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வி முறைகள்:

## ஆசிரியர் தரத்தைவிட உயர்வானதாக இருக்க முடியாது



A.S. யோகராஜா,
கல்வியியலாளர்.
SLTES - I

எந்தக் கல்வி முறையும் அதன் ஆசிரியர் தரத்தைவிட உயர்வானதாக இருக்க முடியாது என்பது அனைவரும் அறிந்த ஓர் உண்மையாகும். நோக்கங்கள் எவ்வளவு சிறந்ததாக இருப்பினும், உபகரணங்கள் எவ்வளவு ஏராளமானதாகவும் காலத்திற்கு ஏற்றனவாகவும் இருப்பினும், கல்வி அமைப்பு ஒழுங்குகள் எவ்வளவு சீரானதாக இருப்பினும் இவற்றால் குழந்தைகள் அடையும் பயன் ஆசிரியர்களைப் பொறுத்ததேயாகும். ஆதலில் ஆசிரியர் தொழிலுக்கு ஏற்ற இயல்பு வாய்ந்தவர்களை நியமனம் செய்தலையும் அவர்களுக்கு கூடுமான அளவு சிறந்த பயிற்சி அளித்தலையும் விட கல்வி சம்பந்தமான திட்டமிடலில் முக்கியமானது வேறொன்றுமில்லை. எனவே தரம் என்பதாற் கருதப்படுவது யாது? ஆசிரியர் தரம் என்பது பயிற்சி பெறுதலும், சான்றிதழ்களைப் பெறுவதற்கும் அப்பால் எவ்வாறு அர்த்தப்படுத்தப்படுகிறது என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### தரம் (Quality) என்பதன் பொருள்

இது ஒரு தரமான பொருள் என நாம் ஒரு பொருளைப் பார்த்து கூறுகின்ற பொழுது, அதற்கு சில பண்புகள் காணப்படுவதை அறிகின்றோம். அதாவது குறித்த பொருள் பாவனைக்கு உகந்தது, உடனடியாகப் பயன்படுத்தக்கூடியது, பெருமளவானோரால் விரும்பப்படுவது, பாவனையாளருக்கு உச்சமட்டத் திருப்தி அளிக்கக் கூடியது, அந்தத் திருப்தி மட்டத்தை நீண்ட நேரம் நிலைநிறுத்தி வைத்திருக்கக்கூடியது போன்றவாறு அர்த்தப்படுத்தப்படுகிறது. அவ்வாறு தரமான கல்வியும் நீண்டகாலப் பயனுடையது. பொருளைப்பயன்படுத்தும் போது கிடைக்கும் திருப்தி மற்றும் இன்பத்தைப்போன்று தரமான கல்வியும் திருப்தி தருகின்றது. அளவிலும், தரத்திலும் மாணவர் கல்வி இடைவுகளை மேம்படுத்துகிறது எனலாம்.

### தரமான ஆசிரியர் எனப்படுவோர் யார்?

ஆசிரியர் இரண்டாவது 'படைப்பாளி' என கூறுவதுண்டு. ஏனெனில் படைப்பாக்க சிந்தனையும் படைப்பாக்கத் திறனும் அதிகம் கொண்டவராக ஆசிரியர் விளங்குகிறார். மேலும் "ஆசிரியர் பிறப்பதில்லை உருவாக்கப் படுகின்றார்" என்ற ஒரு கூற்றும் உண்டு. இவ்வாறு கூறப்படுவதற்கு காரணம், நாட்டின் கல்வித்தரம் உயர்த்தப்படுவதற்கும், பேணப்படுவதற்கும் தரமான ஆசிரியர் உருவாக்கத்திற்கு தரமான



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்விச் செயற்பாடுகள் அவசியம் என்பதே ஆகும்.

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் விஞ்ஞானியுமான டாக்டர் அப்துல் கலாம் 21ஆம் நூற்றாண்டுக்கான ஆசிரியர்கள், மாணவர்களின் ஆற்றலைக் கட்டியெழுப்புவதற்கான (Capacity Building) கருவிகளாக எதிர்பாக்கப்படுகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளதுடன் ஆற்றல் கட்டி யெழுப்புவதற்கான புலன்களாகப் பின்வரு வனவற்றை அடையாளப்படுத்தினார்.

- ஆராய்ச்சி
- புத்தாக்கம்
- உயர் தொழில்நுட்பப் பயன்பாடு
- முயற்சியாண்மைமிக்க தலைமைத்துவம் (Entrepreneurial Leadership)
- ஒழுக்கம் சார் தலைமைத்துவம்

The New Indian Express (2002) பத்திரிகை யானது நடாத்திய ஆய்வொன்றின்படி 21ம் நூற்றாண்டுக்கான ஆசிரியர்களிடம் பின்வருவன எதிர்பார்க்கப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளது.

- பாடப்புலமை
- தொடர்பாடலிலான பிரத்தியேக திறன் கள்
- மாணவர் அனுபவங்களுடன் கூடிய கற்பித்தல் திறன்கள்
- நவீன கற்பித்தல் உபகரணப் பயன் பாட்டினாலான ஆர்வம்
- மாணவர்களை அமைதியாகச் செவி மடுப்பவர்களாகவன்றி பங்காளிகளாக மாற்றும் அக்கறை
- நேரந்தவறாமை, கட்டுப்பாடு, முன்மாதிரி யான நடத்தை
- ஆசிரியர் மாணவர் உறவினை சீராகப் பேணல்
- கற்றலில் வாழ்நாள் மாணவர்

**தரமான ஆசிரியர் கல்வி**

தரமான ஆசிரியர் கல்வி என்பது யாது? என்பதை பின்வரும் ஏழு வினாக்களூடாக விளங்கிக்கொள்ள முடியும்.

இங்குள்ள ஆசிரியர் கல்வி வழங்கும் நிறுவனங்கள் யாவை? ஆசிரியர் தெரிவுசெய் யும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள், அவற்றை வழங்கும் கல்வி நிறுவனங்கள் எத்தகை யவை? அதன் பாடத்திட்டம் எவ்வாறானது? வளவாளர்கள் யாவர்? அவர்களது தகைமை கள் எவை? போதனை முறைகள், கற்றல் சாதனங்கள், தொழில்நுட்பம், கருவிகள், கணிப்பீட்டு மதிப்பீட்டு பிரமாணங்களின் தன்மை, ஆய்வுகள், பிரதிபலிப்புக்கள், செயன் முறை பயிற்சிகள் தொடர்பாக எவ்வாறான நடைமுறைகள் உள்ளன என்பவற்றில் பெரிதும் தங்கியுள்ளது. நாட்டிற்கு தேவையான தரம் மிக்க ஆசிரியர்களை உருவாக்குவதில் தேசிய கல்விக் கல்லூரிகளும், அவற்றின் ஆளணியினரும் பெரும்பங்கு வகிப்பர் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், தொழிலில் மிகுந்த ஈடுபாடும், அர்ப்பணிப்பும் கொண்டவர்களாக அவர்கள் காணப்படவில்லை. மாறாக தரமான ஆசிரியர்களை உருவாக்குவதற்குப் பதிலாக விரிவுரையாளர்கள் தேசிய கல்விக் கல்லூரி களில் கிடைத்த வாய்ப்புக்களை பயன்படுத்தி தமது தகைமைகளையும் தரத்தையும் உயர்த் திக்கொண்டார்கள் என்ற குற்றச்சாட்டு முன் வைக்கப்படுகின்றது.

**ஆசிரியர் தர விருத்தியின் அவசியம்**

அறிவு துரிதமாக மாற்றமடைகின்ற யுகத்தில் புத்தறிவினால் போதிக்கப்படுகின்ற, பிள்ளைகளுக்குப் பொருத்தமான வகையில் அதனைக் கையாண்டு அவர்களை எதிர்கால தொழில் உலகிற்கு தேவையான தேர்ச்சிகளைக் கொண்ட ஆளுமைமிக்க தனியாட்களாக மாற்றும் செயன்முறையின் பால் பழக்கப்படுத்துவதே இன்றைய ஆசிரியர் ஆற்ற வேண்டிய முக்கி யமான பணியாகும். அதாவது ஆசிரியர் தனது வகிபாகத்தில் பயனுறுதியுடன் ஈடுபடு வதாயின் அவர்கள் தமது அறிவை இற்றைப் படுத்திக்கொள்ளல் வேண்டும்.

இதற்காக,

- கல்வியின் புதிய போக்குகளுக்கமைய மீள் பயிற்சி பெறல்
- தனது அனுபவங்களை மீள உயிர்த்தெழச் செய்தல்
- புத்தறிவினைப் பெற்றுக்கொள்ளல்
- எதிர்பாராத சந்தர்ப்பங்களில் எதிர்பாராத வகையில் தோன்றும் பிரச்சனைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறை கூவல்கள், அனர்த்தங்கள் யாவற்றையும் வெற்றிகரமாக எதிர்கொள்ளல்

- குறித்த நிலைமைகளை எட்டுதல்
- ஆய்வு நிலையில் சிந்தித்தல்
- தன்னோக்கு (பிரதிபலிப்பு) சிந்தனையிலீடுபடலும், ஜேர்ணலைப் பேணி வருதலும்.

மேற்படி உள்ள யாவற்றையும் கருத்தில் கொண்டு ஆசிரியர் தர விருத்திசார் பயிற்சிகளில் ஈடுபடுவதற்கு ஆசிரியர் ஒவ்வொருவரும் தமக்குரிய வாய்ப்புக்களைத் தாமாகவே உருவாக்கவும், தேடிப்பார்க்கவும் வேண்டும். உதாரணமாக ஆசிரியர் தனது தர மேம்பாட்டை உயர்த்த பின்பற்றக்கூடிய எளியதொரு நுட்பமாக விளங்குவது தொடர்ச்சியாக தன்னோக்கு சிந்தனைக் குறிப்பேட்டை (Reflective Journal) பேணி வருவதாகும். இதன்மூலம் தனது தொழில் புலத்தில் உள்ள பல்வேறு விடயப் பரப்புக்களிலும் தமக்கு மகிழ்ச்சியூட்டிய மற்றும் கவலையளித்த சம்பவங்களைப் பிரதிபலிப்பு செய்து அவ்வப்போது பிரதிபலிப்பு ஜேணலில் குறித்துக்கொண்டு, பிரச்சினைகளிலிருந்தும், தடைகளிலிருந்தும் விடுபடுவதற்கு சுயமாகவோ அல்லது பிறர் உதவியுடனோ தமது வாண்மைத் துவ தகுதியை மேல் நோக்கி நகர்த்துவதற்கு வாய்ப்பு கிடைக்கின்றது.

## யார் இந்த காந்தாரி...?



காந்தார நாட்டு மன்னன் சுலபனுடைய மகளான காந்தாரியைத் திருதராட்டிரனுக்கு மணம் முடித்து வைத்தார் பீஷ்மர். திருதராட்டிரன் கண் பார்வையற்றவன். கணவன் பிறவிக் குருடன் என்ற காரணத்தால் தானும் தன் கண்களைத் துணியால் கட்டிக்கொண்டு தன் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்தாள். குந்திக்குக் குழந்தை பிறந்த செய்தியைக் கேள்விப்பட்டாள். அப்பொழுது காந்தாரி கருத்தரித்திருந்தாள். குந்திக்குக்குக் குழந்தை பிறந்துள்ளதால் காந்தாரி பொறாமை கொண்டாள். ஆத்திரம் கொண்டு தன் அடிவயிற்றில் அடித்ததால் மாமிசப் பிண்டம் வெளிப்பட்டது. வியாசர் அருளால் அதிலிருந்து நாளாந்தம் ஒருவர் வீதம் நூறு ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் பிறந்தனர். இவ்வாறு காந்தாரி நூற்றியொரு குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். இவர்களில் மூத்தவன் துரியோதனன். இவன் பேராசையும் பிடிவாதமும் கொண்ட மூர்க்கன். இரண்டாவதாகப் பிறந்தவன் துச்சாதனன். மிகக் கொடியவன். கடைசித் தம்பி விகர்ணன் ஒருவன் மட்டுமே நீதி, நியாயங்களுடன் நின்றவன்.



நடந்தேறிய மகாபாரதப் போரில் நூறு பிள்ளைகளையும் இழந்து தவித்துக்கொண்டிருந்த திருதராட்டிரனையும், காந்தாரியையும் நாடாளும் மன்னனான தருமர் ஆறுதல் கூறி அவர்களைப் பதினைந்து ஆண்டுகள் குறையேதுமின்றிப் பாதுகாத்து வந்தான். எனினும் அவர்கள் தங்களின் கடைசிக் காலத்தைக் காடு ஏகித் தவம் புரிந்து வாழ விருப்புடையோம் என வேண்டி நின்றனர். தருமர் எவ்வளவு கூறியும் அதை அவர்கள் கேட்கவில்லை. திருதராட்டிரனையும், காந்தாரியையும் பின் தொடர்ந்து குந்தியும், விதுரரும், சஞ்சயனும் கானகம் சென்றனர். அவர்கள் அங்கு மூன்றாண்டுகள் துறவு, தியானம், தவம் ஆகியவற்றில் ஈடுபட்டிருந்தனர். அன்றொருநாள் காட்டுத் தீ எங்கும் பரவியபொழுது தியானத்தில் இருந்த திருதராட்டிரன், காந்தாரி, குந்தி ஆகிய மூவரும் மாண்டனர். அன்றைய தினம் விதுரரும், சஞ்சயனும் தியானத்தில் ஈடுபட இமயமலையை நோக்கிச் சென்றதால் அவர்கள் இத்தீயிலிருந்து தப்பித்தனர். ■ ■ ■ ■ ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிறிஸ்தவம் க.பொ.த. உயர்தரம்

# மாணவர் பக்கம்

## மாதிரி வினாத்தாள் - பகுதி - 1

தொடர் XXXII

· நில்மினி கஜேந்திரன்

**மாணவர் பக்கம்**

ஜூலை – ஓகஸ்ட் – செப்டெம்பர் – 2025

விடைகள்

| | | |
|---|---|---|
| 1) 2 | 5) 3 | 9) 3 |
| 2) 3 | 6) 3 | 10) 1 |
| 3) 4 | 7) 2 | |
| 4) 1 | 8) 2 | |

1. ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் கட்டாயக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்ட வயதெல்லை எது?

   1. 16 வயது  2. 14 வயது  3. 18 வயது  4. 20 வயது  5. 15 வயது

2. ஒல்லாந்தர் காலத்தில் வழங்கப்பட்ட "லாகிரிடன்" சான்றிதழ் எதற்காக வழங்கப்பட்டது?

   1. கிறிஸ்தவர்களாய் மாறியதற்கு  2. ஒல்லாந்தரின் சட்டங்களை மதித்தமைக்கு
   3. வர்த்தகத்தில் ஈடுபட்டோருக்கு  4. பொது நிலையினர் வர்க்கத்திற்கு
   5. 15 வயது வரை கட்டாயக்கல்வியை முடித்து பாடசாலை பரீட்சை எழுதியவர்களுக்கு

3. "ஒருவன் வாழ்நாள் முழுவதும் செய்ய முடியாத எதையும் தன் மரணத் தறுவாயில் நிறைவேற்ற முடியாது" என்னும் கூற்றுடன் தொடர்புடையவர் யார்?

   1. புனித அன்னை தெரேசா  2. புனித லொயோலா இஞ்ஞாசியார்  3. புனித அக்குவைனாஸ்
   4. புனித செபஸ்தியார்  5. புனித யோசப்வாஸ்

4. சிங்கள மொழியில் 22 நூல்களையும், தமிழ் மொழியில் 15 நூல்களையும், போர்த்துக்கேய மொழியில் 4 நூல்களையும், ஒல்லாந்து மொழியில் 01 நூலையும் எழுதிய எழுத்தாளர் யார்?

   1. புனித யோசப்வாஸ்  2. புனித யாக்கோமே கொன்சால் வேஸ்
   3. புனித அந்தனாசியார்  4. புனித ஜெரோம்  5. புனித அகுஸ்தினார்

5. எல்லா பங்குகளிலும் பரிஷ் பாடசாலைகளை ஆரம்பித்து அரச அனுசரணையுடன் மறைபோதகப் பணிகளை முன்னெடுத்த பெருமைக்குரியவர் யார்?

   1. புனித அக்குவைனாஸ்  2. புனித பசில்  3. புனித ஜெரோம்
   4. புனித பிலிப் பல்தேயு  5. புனித யோசப்வாஸ்

6. பிரித்தானிய நாட்டின் ஆளுநரான 3ஆம் ஜோன் மன்னனின் பிறந்தநாள் அன்று இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட சட்டம் எது?

   1. மக்னா காட்டா சட்டம்  2. திருச்சபை சட்டம்  3. விதித்தொகுப்பு
   4. மோயீசன் சட்டம்  5. கிறிஸ்தவ திருமறைச் சட்டம்

7. பரிசுத்த வேதாகமத்தை 1812இல் சிங்கள மொழியில் மொழிபெயர்க்க நடவடிக்கை மேற்கொண்டவர் யார்?

   1. வில்லியம் கோபல்லாவ  2. வில்லியம் டொல்ப்பிறின்  3. வில்லியம் சேர்
   4. சிறிமத் றொபட்  5. ஜோர்ச் பிசட்

8. 1883 இல் இலங்கையின் 3ஆவது மறைமாவட்டமாக உருவாக்கப்பட்ட மாவட்டம் எது?

   1. புத்தளம்  2. காலி  3. கண்டி  4. கொழும்பு  5. யாழ்ப்பாணம்

9. புனித சூசையப்பர் துறவறசபை, புனித பேதுரு கன்னியர் மடம் என்பன யாழ்ப்பாணத்தில் கி.பி 1862 இல் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் என்ன?

   1. அனைவருக்கும் கல்வி வழங்க  2. தேசிய மொழியில் பாடசாலைக் கல்வியை வழங்க
   3. பின்தங்கிய மாணவர்களுக்கு பாடசாலைக் கல்வியை வழங்க
   4. சிறந்த முறையில் தம் பணியினை வழங்க  5. கட்டாயக் கல்வியை வழங்க

10. கொழும்பு அக்கடமி மிகவும் உயர் மட்டத்தில் பேணப்பட்ட பாடசாலையாக மாறிய காலம் எது?

    1. ஒல்லாந்தர் காலம்  2. பிரித்தானியர் காலம்  3. போர்த்துக்கேயர் காலம்
    4. தற்காலம்  5. போர்த்துக்கேயர் வருகைக்கு முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கடுகுக்கதை – 141

# வட்டிக்கடன்

அன்ரன் தன் நண்பன் ஒருவன் மூலமாக ஒரு பெண்ணிடம் ஒரு இலட்சம் ரூபா காசு கடன்பட்டிருந்தார். அப்பெண் தன் கணவனை இழந்தவள். மாதமொன்றுக்கு எட்டாயிரம் ரூபா வட்டி.

தன் மகனின் மருத்துவச்செலவிற்காகத் தான் அன்ரன் அப்பணத்தைப் பெற்றிருந்தார். ஒவ்வொரு மாதமும் எட்டாயிரம் ரூபா வட்டி கொடுக்கும் போது குடும்ப செலவில் இறுக்கம் ஏற்பட்டு கொண்டிருந்தது.

அவர் தனது அலுவலகத்தில், இடருதவிக் கடன் பெற விண்ணப்பம் பெற்றிருந்தார். அதற்கான வட்டி வீதம் ஆண்டுக்கு நான்கு சதவீதம் மட்டும்தான். இம்மாதம் அவர் விண்ணப்பம் செய்த கடன் தொகை அவருக்கு கிடைத்தது.

உடனே ஒரு இலட்சம் ரூபாவை எடுத்துக்கொண்டுபோய் அப்பெண்ணிடம் கொடுத்தார். காசைக்கொடுத்ததும் அப்பெண்ணின் முகம் பேய் அறைந்தது போலாயிற்று.

“ஐயா ! ஏன் அவசரப்பட்டு காசைக் கொண்டுவந்து தாரிங்க? ஆறுதலாக தரலாம் தானே! நீங்க தாற வட்டி காசுதான் யுனிவசிற்றில படிக்கிற என்ர மகனுக்கு உதவியாய் இருந்தது. இனி நான் என்ன செய்யப்போறன்...?”

என்று அழத்தொடங்கினாள்.

அன்ரன் விறைத்துப்போனார்: இப்படியொரு அநுபவம் எவருக்கும் வந்திருக்காது. ‘விறுவிறு’ என்று வீதிக்கு வந்து ‘மோட்டார் சைக்கிளை’ ஸ்டார்ட் பண்ண ‘கிக்கரை’ உதைத்தார்.

## தெரிந்து கொள்வோம்



மகாபாரதம், இராமாயணம் ஆகிய இரண்டும் உலகம் போற்றும் உயர்ந்த இதிகாசங்களாகும். மகாபாரதம் இராமாயணத்தைவிடப் பெரியது. அதில் சுமார் முப்பதாயிரம் (30,000) பாடல்கள் உள்ளன. வியாச மகரிசி அவர்களால் மகாபாரதம் எழுதப்பட்டது. இந்நூல் எழுந்த கால எல்லையைக் கணக்கிட்டுக் கூறமுடியாது. ஆனாலும் மகாபாரதம் கி.மு. 1,500 ஆண்டுகளுக்கு முற்பட்ட நூலென்று சிலர் கருத்துரைப்பர். வியாசர் பாரதத்தைத் தழுவித் தமிழில் முதன் முதலில் எழுந்த காப்பியம் வில்லிப் புத்தூர் ஆழ்வாரால் இயற்றப்பட்ட வில்லி பாரதம் ஆகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# மறைமாவட்ட செய்திகள்



"வந்து பாருங்கள்" நிகழ்வு

மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் இதயமாகக் கருதப்படும் புனித சூசையப்பர் சிறிய குருமடத்தில் "வந்து பாருங்கள்" நிகழ்வு மிக விமர்சையாக சிறிய குருமட அதிபர் அருட்தந்தை பத்திநாதன் சுகந்தன் அடிகளார் தலைமையில் நடாத்தப்பட்டது. இந்நிகழ்வானது மூன்று நாட்கள் வதிவிட நிகழ்வாக 54 மாணவர்களுடைய பங்கேற்புடன் 07.11.2025 தொடக்கம் 09.11.2025 வரை நடாத்தப்பட்டது.

## இளைப்பாறிய ஆயர், குருக்கள், துறவியர்கான ஆன்ம இளைப்பாற்றி திருப்பலி



மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் பணியாற்றி இளைப்பாறிய ஆயர், குருக்கள், துறவியருக்கான ஆன்ம இளைப்பாற்றி திருப்பலி 03.11.2025 அன்று மாலை தூய மரியாள் பேராலயத்தில், மட்டக்களப்பு மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜோர்ஜ் ஜீவராஜ் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அவரோடு இணைந்து ஏனைய குருக்களும் திருப்பலியை நிறைவேற்றினர்.

## இறந்த விசுவாசிகளின் நினைவுத்திருநாள் திருப்பலி



தாண்டவன்வெளி தூய காணிக்கை அன்னை ஆலய பணித்தளத்தின் கீழ் அமைந்துள்ள கள்ளியங்காடு "உயிர்ப்பின் உறைவிடம்" சேமக்காலையில் இறந்த விசுவாசிகளின் நினைவுத்திருநாள் திருப்பலி 02.11.2025 அன்று மாலை 04.00 மணிக்கு, இருதயபுரம் திரு இருதயநாதர் ஆலய பங்குத்தந்தையும். மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத்தொடர்பு நிலைய இயக்குனருமான அருட்பணி கிளமென்ற் V அன்னதாஸ் அடிகளார் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அவரோடு இணைந்து ஏனைய குருக்களும் திருப்பலியை நிறைவேற்றினர். இத்திருப்பலியில் அருட்சகோதர சகோதரிகள், பொதுநிலையினர் என பலரும் கலந்து கொண்டனர்.


## ஆலையடிச்சோலை சேமக்காலையில் இறந்த விசுவாசிகளின் நினைவுத்திருநாள் திருப்பலி

வீச்சுக்கல்முனை புனித அன்னம்மாள் ஆலய பங்கின் பணித்தளத்தின் கீழ் அமைந்துள்ள ஆலையடிச்சோலை சேமக்காலையில் இறந்த விசுவாசிகளின் நினைவுத் திருநாள் திருப்பலி 02.11.2025 அன்று மாலை 04.00 மணிக்கு மட்டக்களப்பு மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜோர்ஜ் ஜீவராஜ் அடிகளார் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அவரோடு இணைந்து ஏனைய குருக்களும் திருப்பலியை நிறைவேற்றினர்.





Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# துருவ நட்சத்திரம்

சிறுகதை



பைந்தமிழ்க்குமரன் ஜெ.டேவிட்

**கை**விடப்பட்ட மிகவும் பழைய மின்கம்பம் தனியனாய் நிற்கிறது. கறையான்கள் புற்றெடுத்து உள்நுழைந்து படர்ந்து அரித்து அவை மழையில் கரைந்து ஓடி சிதிலங்களாகி நிற்கிறது அந்த மரம். அலையும் மாடுகள் உராய்ந்தாலே போதும் அது அடியால் முறிந்து விழுந்து விடும். அதனடியில் சுருண்டு படுக்கிறது அந்த நாய். எலும்பும் தோலுமாய்த் தெரிகிறது. அது தூங்கவில்லை. பளபளக்கும் அதன் கண்கள் திண்ணையில் சுருண்டு கிடக்கும் மனித உருவத்தைப் பார்த்தபடியே இருக்கின்றன. காய்ந்த சருகுகள் சுற்றிலும் பரந்து கிடக்கின்றன. அந்த ஓலைக்குடிசையில் ஆயிரம் ஓட்டைகள். பழுப்பேறிய நைந்துபோன சில பாத்திரங்கள். மூலையில் சாம்பல் மண்டிக்கிடக்கும் அடுப்பு. பல மாதங்களாக எரிந்தமைக்கான எந்த அடையாளங்களும் இல்லை. திண்ணையில் வானத்தைப் பார்த்தபடி அந்த மனிதர். வயது அறுபத்தொன்பது. நெஞ்செலும்புகள் தெளிவாக துருத்திக்கொண்டு தெரிகின்றன. வயிறு பள்ளம் விழுந்து முதுகுத்தண்டோடு ஒட்டிக்கிடக்கின்றது. பரட்டையேறி நரைத்த தலைமுடி. ஆழமாக மிக ஆழமாக சிந்தித்தபடியே வானத்து நட்சத்திரங்களை ஆவலோடு பார்த்துக்கொண்டிருக்கிறார். ஒரு காலத்தில் அழகு ஆசிரியர் என்றால் பெரும் மதிப்பும் மரியாதையும் இருந்தது. காதல் மணம் முடித்த கையோடு இந்த ஊருக்கு மாறுதல் எடுத்துக்கொண்டு வந்து சேர்ந்தவர். வள்ளுவருக்கு வாசுகிபோல அவருக்கு அவர் மனைவி தேவி. அவள் முகம் கடுந்து கொண்டதான சரித்திரமே இல்லை. அவர்தான் அவளின் மூத்த குழந்தை. பிறந்த மகனைப் பார்த்தவர்களெல்லாரும், “அச்சு அசலா ஜயாதான் பொடியனும்” என்றார்கள். ஊரில் நல்லது கெட்டது என்றால் அழகு மாஸ்ரர்தான் முதல் ஆள். அவர் இல்லாத சிறப்புகள் எதுவும் அந்த ஊரில் நடக்காது. “ஜயா உங்கட மனிசியையும் கூட்டிக் கொண்டு அவசியம் வந்திரவேணும் என்ன” என்பார்கள். அவளையும் அவரையும் அந்த ஊர் கொண்டாடியது.

கடிகாரம் ஓய்வதில்லையல்லவா? காலங்களும் கரைந்தன. முப்பத்தேழு வருட அரச சேவையில் பணி ஓய்வு காண்கிறார் அழகு மாஸ்ரர். ஒரே ஒரு வருடத்தில்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மஞ்சட் காமாலை வந்து காலனிடம் அமைதி பெற்று விடுகிறாள் அவர் மனைவி தேவி. மகன் கிராமத்தில் படித்து நகரத்தில் உயர் கல்வி பல்கலைக்கழகம் என்று உயர்ந்து லண்டனில் குடும்பமும் குழந்தையுமாய் கலந்து போனான். அழகு மாஸ்ரர் அழகிழந்து வாடி வதங்கி விதியின் கைகளில் விளையாட்டுப் பொம்மையாய்ப் போனார். அந்தி சாய்ந்து விட்டது. வானத்தில் மின்னும் நட்சத்திரங்களை விரல் நீட்டி எண்ணிக் கொண்டிருக்கிறார். சிறுவர்கள் அவரைப் பைத்தியம் என்று கூறிச் சிரிக்கிறார்கள். சிலர் பிச்சைக்காரக் கிழவன் என்கிறார்கள். இரண்டு மல்லிகைச் செடிகள் மிக நன்றாக வளர்ந்து செழித்து பூத்துக்கிடக்கிறது.

அவன் சற்றுப் பயந்தபடியே பேசுகிறான். "ஐயா... ஐயா... நான் ரியூசன் முடிஞ்சி வாறன். நாளைக்காலையில வந்து மல்லியப்பூ கொஞ்சம் ஆயவா?" அவருடைய பார்வை விண்ணிலிருந்து மண்ணிற்கு திரும்புகிறது. "இஞ்ச வா தம்பி...." ஆவலோடு கூப்பிடுகின்றார். அவன் "என்னய்யா ..." என்கின்றான். "அங்க பார் எத்தன நட்சத்திரங்கள். அதுகளெல்லாம் எனக்கிட்ட படிச்ச பிள்ளயள்.... அந்தா அது குமரன். அவன் பெரிய டொக்ரர். இந்தா இது வாணி அவ வங்கியில பெரிய மனேஜர். அது கேசவன். பொலிஸ் அதிகாரி. அந்தா அது சுதர்சன் பெரிய விஸ்னஸ் மேன். பெரிய வீடு காரு அப்பப்பா... எனக்கிட்ட படிச்சதுகளெல்லாம் எங்கும் பரந்து எப்பிடியெல்லாம் சிறப்பா சீவிக்குதுகள் தெரியுமா? நீயே பார் எத்தின நட்சத்திரங்கள் ... உன்னால எண்ண முடியுதா? அதுகளெல்லாம் நான் படிப்பிச்ச பொக்கிசங்கள்... பாரு தம்பி அதுகள் நல்லா இருக்கோணும். ஆ.... நீ... என்ன கேட்டனீ... பூ...பூ...பூ...தானே... தாராளமா வந்து ஆய்ச்சிற்றுப்போ... என்ன...". அவன் முகம் மலர்கிறது. அவரை அதிசயமாகப் பார்க்கிறான்.

"ஐயா... என்ன சொல்றீங்க...அந்த நட்சத்திரங்களெல்லாம் நீங்க படிப்பிச்ச பிள்ளயளா?..." "ஆமாண்டா அந்த நட்சத்திரங்களெல்லாம் என்ர பிள்ளயள். நான் படிப்பிச்ச மாணவர்கள். இந்த ஊரில, அடுத்த ஊரில ரவுணில வெளிநாடுகளில எல்லா இடமும் வசதியா சந்தோசமா சீவிக்குதுகள். ஆனா..... ஆனா.... ஒரு நாள் ஒரு தரமாவது என்னய வந்து பாத்து, 'ஐயா.... எப்பிடியிருக்கிறீங்க... சாப்பிட்டீங்களா...?' எண்டு யாருமே கேக்க மாட்டாங்க... யாருமே.... கேக்க... மாட்டாங்க...." குரல் தளர்ந்து தொண்டை கட்டி கண்கள் குளமாகி கண்ணீர் வழிகிறது. அவன் கண்களும் கசிகின்றன. சில கண்ணீர்த்துளிகள் அவன் இதயத்தில் விழுகின்றன. தினமும் அவரைத்தேடி வரத் தொடங்கினான். பத்து பதினைந்து நிமிடம் அவரோடு பேசுவது ஏதாவது உணவுகளை பொட்டலமாகச் சுற்றி வந்து கொடுப்பது, அவரிடம் தமிழ்ப்பாடத்தில் ஏதாவது சந்தேகம் கேட்பது, அதற்கு அவர் அடையும் மகிழ்ச்சியும் கொடுக்கும் விளக்கங்களும் என்று நாட்கள் சில கழிந்தன. அவருடைய சொற்ப பென்சன் பணத்தில் கழிந்த அவரது நாட்களை அவன் கொஞ்சமேனும் நீட்டித்தானா என்றால் ஆம் என்பதே உண்மை. தன்னையும் அந்த தீபத்தில் பட்டை தீட்டிக் கொண்டிருந்தான்.

கடந்த இரவு அந்த தீபம் இந்தத் திண்ணையிலே அணைந்துபோயிற்று. படிக்கட்டில் அந்த நாயும்கூட அவரைப் பார்த்தபடியே ஓய்ந்திருந்தது. கறையான் அரித்த ஒற்றை மின் கம்பம்கூட சாய்ந்து கிடந்தது. குடிசையின் பக்கவாட்டுத் தகரத்தில் கரித்துண்டு கொண்டு எழுதினான்...

"நட்சத்திரங்களாக வாழ்வித்த
நல்லாசிரியருக்கு மாணவனாய் மலர்ந்தேன்...
மனிதனாய் வாழ கற்றுத்தந்தீர்கள்....
நன்றி ஐயா"

இப்படிக்கு,
ஜீவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசியல்

## நம்பி நம்பி மோசம் போனவர்கள்

- குடிமகன்

நம்பி, நம்பி மோசம் போகின்ற இனம்தான் இலங்கை தமிழினம். எல்லா ஆட்சியாளர்களும் அல்லது ஆட்சிக்கு வரத்துடிப்பவர்களும் ஏமாற்று பவர்களாகத்தான் இருக்கின்றார்கள். அவர்களின் வேடந்தரித்த முகங்கள் சில சந்தர்ப்பங்களில் வெளிப்பட்டுவிடும். திருகோணமலையில் நடந்த புத்தர் சிலை விவகாரம் இதற்கு சிறப்பான எடுத்துக்காட்டு.

ஆளும் தரப்போ முதலில் ஒரு அறிக்கை, பண்ணிரெண்டு மணித்தியாலங்களில் இன்னுமொரு அறிக்கை. சிலையை எடுத்துச்சென்றார்கள்: பின்னர் கொண்டு வைத்தார்கள். இனவாதத்திற்கு பயந்துவிட்டார்கள் போலும்.

எதிர்கட்சித் தலைவர் அவர்கள் விடுத்த அறிக்கையும் விசனம் தரக்கூடியதாய் இருந்தது: பௌத்தத்திற்குத்தான் முன்னுரிமையாம்: அதற் காக அவர்கள் விரும்பிய இடங்களில் எல்லாம் சிலையை வைக்கலாம் என்று நினைக்கின்றார் கள்.

திருகோணமலைப் பகுதியில் பாலர் பாடசாலை கட்டிடம் ஒன்றை ஆக்கிரமிக்க வந்த 'காவி' துறவிகள் பெற்றோர்களால் (சிங்களப் பெற்றோர்களால்) அடித்து துரத்தப்பட்டுள்ளனராம். எவ்வளவு காலம் இது நீடிக்குமோ தெரியாது.

திருகோணமலை சிலை விவகாரத்தில் கொழும்பு போன்ற இடங்களில் இருந்து பல துறவிகள் வந்திருந்தார்களாம். இதில் ஒரு துறவி இஸ்லாம் தொடர்பாக அவதூறாகப் பேசிய மைக்காக நீதிமன்ற தண்டனையை பெற்றவர்.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்திலும் "தொல்லியல் இடங்கள்" என்ற பெயர் பலகைகள் நடப்பட்டு வருகின்றமையை ஊடகங்கள் வெளிப் படுத்தியுள்ளன. அநுமதியின்றி நடப்பட்ட பெயர் பலகைகளை உள்ளூராட்சி மன்றங்கள் அகற்றி யுள்ளன. இப்போது அவ்வாறு அகற்றியமைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் போகின்றார் களாம். "இவனுகள திருத்த ஏலாது" என்று அன்னம்மா கிழவி முனுமுனுக்கின்றாள்.

இதற்கிடையில் தே.ம சக்தி வசமுள்ள சில உள்ளூராட்சிமன்றங்களின் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவு திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டுள்ளன. இதை சதி என்று சொல்வார்கள். ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவுகள் எல்லாம் கட்சியின் தலைமையகத்திற்குத்தான் திசை திருப்பி விடப்படுகின்றனவாம், பாவம் அவர்கள். அதுபோல் உள்ளூராட்சி மன்ற உறுப் பினர்களும் கடும் கட்டுக்கோப்புக்குள் வைக்கப் பட்டுள்ளார்கள் போலும்; கடும்முறுக்கு தெறிக்கு மல்லவா...?

எழுபதாம் ஆண்டுகளின் நடுப்பகுதிகளில் நடந்த ஒரு சம்பவம் எனக்கு ஞாபகம் வருகின்றது. செங்கலடியில் புனித நிக்கலஸ் தேவாலயம் பிரதான வீதியை அண்மித்து காணப்படுகின்றது. அப்போது முட்கம்பி வேலிதான் எல்லைப் பாதுகாப்பு. வீதியோரமாக வேலியில், பிரமாண்ட அரசமரம் ஒன்று காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அப்போது நான் சிறுவன். ஒரு நாள் காவியுடைத் துறவியொருவரும் இன்னும் சிலரும் வந்தார்கள்: அரச மரத்தைச் சுற்றி அளந்தார்கள்: தேவாலய காணியின் அரசமரப் பகுதியினையும் அளந்தார்கள்: சென்று விட்டார்கள். 'சிலையொன்று வரப்போகுது போல' என்று பெரியவர்கள் சொன்னார்கள். பங்குத்தந்தை தன்னாமுனையில் தான் இருப்பவர். மறுநாள் அவருக்கு தெரியப் படுத்தவேண்டும் என்று அவர்கள் கதைத்துக் கொண்டார்கள். அக்காலத்தில் செங்கலடி தேவாலயம் தன்னாமுனைப்பங்கின் கீழ்தான் இருந்தது.

ஆனால், மறுநாள் காலையில் பார்த்தபோது அவ்வரசமரம் அப்படியே இயற்கையாகவே வீதிக்கு சமாந்தரமாக அடியோடு வீழ்ந்து கிடந்தது. எவரும் வெட்டவும் இல்லை: தறிக்கவும் இல்லை: எவருக்கும் பாதிப்பும் இல்லை.

இதுவோர் புதுமை என்றே கத்தோலிக்கர்களும் நம்பினர்ரகள், இந்துக்களும் சொன்னார்கள்.

நீண்ட நாள் போராட்டங்களின் பின்னர் தான் மட்டக்களப்பில் 'ஒசுசல' கிளையொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலம் தொடக்கம் இதற்கான முயற்சிகள் எடுக்கப் பட்டன. அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கும் இதில் ஈடுபாடு இருக்கவில்லை. அத்துடன் தனியார் மாபியாக்களுக்கும் விருப்பம் இல்லை. (வெளியில் ஆயிரத்து எண்ணூறு ரூபாவுக்கு கொள்வனவு செய்த மருந்தொன்றை ஒசுசலவில் முந்நூற்று நாற்பத்தெட்டு ரூபாவிற்கு ஒருவர் கொள்வனவு செய்துள்ளாராம்.)

இவ்வாறு ச.தொ.ச கிளையும் நீண்ட இழுபறிக்கு பின்னர்தான் திறந்து வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

- "கல்லிலே கடவுளைக் காண வேண்டும். கடவுளை கல்லாக்க முற்பட்டுவிடக் கூடாது"
- "நம்முடைய உடலை கடவுள் வசிக்கும் கோயிலாக நாம் வைத்திருக்க வேண்டும்"
- "அறிவு மட்டும் ஞானம் அல்ல. அறிவுடன் அனுபவமும் பெற்றால்தான் ஞானம் கிடைக்கும்"

# யார் இந்த வானதூதர்கள்?

3ம் பக்கத் தொடர்ச்சி.....

.... இப்படியாகப் பற்பல பணிகளுக்கு பற்பல வானதூதர்கள் பொறுப்பேற்று ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் ஒரு தொடர்பை பேணுகின்றார்கள். (மத் 18:10) மனிதன் கடவுளிடம் வேண்டும் மன்றாட்டிற்கு பதிலளிக்க வானதூதர்கள் வருகின்றார்கள் (தி. பணி 12:3-10). நல்லோரின் மரண வேளையில் வானதூதர்கள் துணையாக நிற்கின்றார்கள் (லூக்கா 16:22). இயற்கை மீது அதிகாரம் கொண்டவர்களாகவும், ஆண்டவரின் தண்டனைத் தீர்ப்பை செயல்படுத்தும் கருவிகளாகவும் வானதூதர்கள் உள்ளனர் (தி.வெ 7:1-2). "ஆண்டவர் வானதூதரைக் குறித்து காற்றுகளாகவும் தம் பணியாளரைத் தீப்பிழம்புகளாகவும் செய்கிறார்" என்றார் (எபிரேயர் 1:7).

ஆக, இறைவனின் மீட்புத் திட்டத்தில் இறைவனுக்கு துணைபுரிபவர்கள் இந்த வானதூதர்கள். வெவ்வேறு பணிகளையும் வெவ்வேறு உருவங்களையும் கொண்ட வானதூதர் இறைவனுக்கு தொண்டாற்றுகின்றார் (எபி 1:4).

நாம் விவிலியத்தை ஆதாரமாகக் கொண்டு இந்த வானதூதர்களை பற்றி தியானிக்கின்ற வேளையிலே இஸ்லாமிய மதத்திலும் வானதூதர்கள் பற்றிய நம்பிக்கை உண்டு. கத்தோலிக்க விவிலியத்தில் நாம் பெயர் சொல்லி அழைக்கின்ற வானதூதர்களின் பெயர்களுக்கும் அல் குறானில் கூறப்படுகின்ற வானதூதர்களின் பெயர்களுக்குமிடையே ஒரு ஒற்றுமையைக் காண்கின்றோம். இஸ்லாமில் கூறப்படுகின்ற வானதுர்தர்கள் யார்?......

- தொடரும்......

## பொன்மொழிகள்

- "நாவை அடக்கினால் நாம் ஞானி ஆகிவிடுவோம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பார்வைகள் பலவிதம்! 36

- ஹென்றி

ஒரு ஊரில் ஒரு கப்பல் வியாபாரி இருந்தார். அவரிடம் இருந்த ஒரு பெரிய கப்பல் பழுதாகி விட்டது. ஊரில் உள்ள பெரிய மெக்கானிக் எல்லாம் வரவழைத்து கப்பலின் எஞ்சினை சரி செய்யச் சொன்னார். ஆனால், யாராலும் இஞ்சினில் என்ன பழுது என்று கண்டு பிடிக்க முடியவில்லை.

ஒரு வயதான மெக்கானிக், தான் அதை பழுது பார்த்து தருவதாகச் சொன்னார். சரி என்று அவரும் ஒப்புக்கொண்டார். மெக்கானிக் பெரிய பையில் பழுது பார்க்கும் பொருட்கள் எல்லாம் வைத்திருந்தார். கப்பல் வியாபாரிக்கு இவர் மேல் நம்பிக்கை வந்துவிட்டது.

அந்த வயதான மெக்கானிக் கப்பலின் எஞ்சினை நாலா பக்கமும் சுற்றி வந்து பார்த்தார். பிறகு தன் பையிலிருந்து சுத்தியல் ஒன்றை எடுத்து ஓரிடத்தில் ஓங்கி அடித்தார். பின்னர் எஞ்சினை ஸ்ரார்ட் செய்து பார்த்தார். உடனே எஞ்சின் வேலை செய்ய ஆரம்பித்து விட்டது.

கப்பல் வியாபாரியிடம் அந்த மெக்கானிக் "நாளை என் கடையில் வேலை செய்யும் பையனிடம் பில்லைக் கொடுத்து அனுப்புகிறேன்" என்று சொல்லி விட்டு கிளம்பி விட்டார்.

அடுத்தநாள் ஒரு பையன் பில்லைக்கொண்டு வந்து அவரது கையில் கொடுத்தான். அதைப் பார்த்த கப்பல் வியாபாரி அதிர்ச்சி அடைந்தார். அதில் ஒரு லட்சம் ரூபாய் என்று போட்டிருந்தது. அவர் அந்த பையனிடம், "தெளிவாக பில்லைப் போட்டுக்கொண்டு வா" என்று சொல்லி அனுப்பி வைத்தார்.

அடுத்த நாள் பையன் வேறு ஒரு பில்லுடன் வந்திருந்தான். அதில் சுத்தியலால் அடித்ததற்கு 5 ரூபாய் எனவும் அடுத்து எங்கு அடிக்க வேண்டும் என்று கண்டு பிடித்ததற்கு 99,995 ரூபாய் எனவும் எழுதியிருந்தது.

தலையில் மூளை இருந்தால் மட்டும் போதாது. அதை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்றும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். ❑❑❑


**"பெரிய கோழை கூட உலகமெல்லாம் அவனைப் புகழுமென்றால் பெரிய வீரனாக மாறிவிடுவான்"**
- சுவாமி விவேகானந்தர்

**"சாதாரண மனிதன் இந்த உடலை விட்டுச் செல்லும்போது அழுகிறான். மகானோ சிரிக்கிறார்"**
- அன்னை ஸ்ரீ சாரதா தேவியார்

**"இறந்துபோனவனிடம் உயிர் இருப்பதற்கு அடையாளமான உணர்ச்சி காணப்படாததைப் போல, அஞ்ஞானியிடம் ஆத்மா இருக்கும் அடையாளமே செயலில் காணப்படுவதில்லை"**
- விவேக சூடாமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உலக சுனாமி விழிப்புணர்வு தினம்

- வத்திக்கான் செய்தி

டிசம்பர் 2015 இல், ஐநா பொதுச் சபை நவம்பர் மாதம் 5ம் திகதியை, 'உலக சுனாமி விழிப்புணர்வு தினமாக (World Tsunami Awareness Day) அறிவித்தது. இத்தினம் ஜப்பானின் சிந்தனையில் உருவானது. ஆழிப்பேரலை அல்லது சுனாமி என்பது ஒரு ஜப்பானிய மொழிச் சொல். "சு" என்றால் துறைமுகம் என்றும், "னாமி" என்றால் அலை என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. எனவே, சுனாமி என்ற சொல்லுக்கு "துறைமுக அலை" என்று பொருள்.

கி.மு. 426ல் கிரேக்க வரலாற்றாசிரியர் தியுசிடைட்ஸ், சுனாமி ஏற்படுவதற்கான காரணங்களை "பிலோப்போனேசியப் போர் வரலாறு" என்ற புத்தகத்தில் கூறியுள்ளார். அவர் தான் முதன்முதலில் கடலில் நிலநடுக்கம் ஏற்பட்டது என்றும், எந்த இடத்தில் நிலநடுக்கம் கடலில் உண்டானதோ அங்கு கடல் உள்வாங்கும். பின்பு திடீர் பின்வாங்குதலும், மறு இரட்டை சக்தியும் கொண்ட வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. நிலநடுக்கம் ஏற்படாமல் இப்படி ஒரு விபத்து ஏற்பட வாய்ப்பே இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

கி.பி. 365 இல் அலெக்சாந்திரியாவில் மிகப் பெரிய அழிவுக்குப்பின் உரோமன் வரலாற்றாசிரியர் அம்மியனஸ் மாசில்லினுஸ், சுனாமி என்பது, நிலநடுக்கத்தில் தொடங்கி கடல் நீர் பின்னடைவு, அதைத் தொடர்ந்து இராட்சத அலை என்ற தொடர்ச்சியான நிகழ்வாக அமைகிறது என்றார். அதாவது, நிலநடுக்கம் என்பது நிலப்பகுதியில், கடல் பகுதியில், மலைப்பகுதியில் ஏற்படும். நிலப்பகுதியில் வந்தால் நிலத்தில் உள்ளவை அதிர்ந்து சேதமாகிறது. கடலில் வந்தால் கடலின் ஆழமான பகுதியிலுள்ள நிலத்தட்டுக்களின் அசைவு பெரிய அலைகளை உருவாக்குகின்றது. மலையில் எரிமலையாக உருவெடுகிறது.

பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரே நிலத்தட்டுத்தான் இருந்தது. அதன் மீது தான் பூமி இருந்தது. ஆனால் கண்டங்களாகப் பிரிய, பிரிய, அதன் தட்பவெப்ப, இயற்கை சூழ்நிலைகளுக்கு ஏற்ப, பல்வேறு நிலத்தட்டுக்கள் உருவாகின. இந்தத் தட்டுக்களின் மீதுதான் ஒவ்வொரு கண்டமும் இருக்கின்றன. நிலம், கடல் எல்லாவற்றையும் தாங்கி நிற்பது இந்த நிலத்தட்டுக்கள் தான். இதைத் தான் 'டெக்டானிக் பிளேட்கள்' என்று புவியியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

1755 ஆம் ஆண்டு, நவம்பர் 1ம் திகதி போர்த்துக்கல் நகரான லிஸ்பனில் ஏற்பட்ட பயங்கர நில நடுக்கம், போர்த்துக்கல், ஸ்பெயின், மொராக்கோ நாடுகளில் சுனாமி பேரழிவை ஏற்படுத்தியது. 1883 ஆம் ஆண்டளவில் ஜாவா-சுமத்ரா இடையே கிரகோடா என்ற பகுதி எரிமலைப் பகுதியாகத் திகழ்ந்தது. அங்கு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் அணுகுண்டை விட 10 ஆயிரம் மடங்கு சக்தி வாய்ந்த வெடிசம்பவம் நடந்தது.

இயற்கைக்கு இணையாக செயற்கை ஈடுகட்டி நிற்கிறது என்றாலும், சில நேரங்களில் ஏற்படும் இயற்கைப் பேரழிவுகளை எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாததை நாம் காண நேரிடுகிறது. அதுபோல்தான் சுனாமியும். இந்தச் சுனாமி ஓர் இயற்கைப் பேரிடர் என்பதால் அதனைக் கட்டுப் படுத்தும் ஆற்றலும் வலிமையும் மனிதரின் கரங்களில் இல்லை. ஆனாலும் இப்புவியைப் பாதுகாக்கவும் அதனைப் பராமரிக்கவும் வேண்டிய பொறுப்பு மனித இனத்தின் மிகப்பெரும் கடமையாக அமைகிறது. அவ்வாறு கொள்ளும்போது சுனாமி என்னும் இந்த இயற்கைப் பேரிடரிலிருந்து மனித இனம் தன்னை ஓரளவாவது காப்பாற்றிக்கொள்ள முடியும் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வினாவிடைப் போட்டி இலக்கம் - 62

போட்டிக்கான பரிசுகள் அனுசரணை: திரு. லெஸ்லிராஜ் : ஜே.ஜே. சுப்பர் மார்க்கட்
மெயின் வீதி, தன்னாமுனை. 0779780151

*முதலில் வரும் ஐந்து வினாக்களும் 1 கொரிந்தியர் 01-15 வரையான அதிகாரங்களில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன.*

1) கடவுள் தூய ஆவியார் வழியாக எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார் என்பது பற்றி மறை நூலில் குறிப்பிடப்படுகின்றது? ..........

2) ஆண்டவரின் அழைப்பில் நிலைத்திருக்க எவ்வாறு இருக்க வேண்டுமென பவுல் குறிப்பிடப்படுகின்றார்? ..........

3) பவுல் காலத்தில் கொரிந்து நகர சூழல் எவ்வாறு இருந்ததாக கூறப்படுகின்றது? ..........

4) தூய ஆவியின் அருளும்,கொடைகள் எவை? ..........

5) நம் முன்னோர்கள் மோசேயோடு இணைந்திருக்கும்படி எவ்வாறு திருமுழுக்கு பெற்றனர்? ..........

6) இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு நற்செய்தியில் முதற் சாட்சி யார்? ..........

7) கணிதவியலாளரும், கோட்பாட்டு இயற்பியலாளருமான ஜேம்ஸ் கிளார்க் மேற்கொண்ட பரிசோதனை, கண்டுபிடிப்புக்கள் 03 தருக? ..........

8) Dr.Peter Craft என்ற கத்தோலிக்க எழுத்தாளர் வானதூதர்களைப்பற்றி என்ன குறிப்பிடுகின்றார்? ..........

9) இயேசுவின் பிறப்பின் காலத்தில் வானதூதர்கள் செயற்பட்ட 04 சந்தர்ப்பங்களை தருக? ..........

10) சீனாவின் கட்டுப்பாட்டில் இருந்த தாய்வான் எந்த ஆண்டு தனி நாடாகியது? ..........

பெயர் : ..........

முகவரி : ..........

..........

பங்கு : ..........

தொ.பே.இல: ..........

அனுப்பவேண்டிய முகவரி :

**வினாவிடைப் போட்டி - 62**
**'தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**

**முடிவுத் திகதி : 10.01.2026**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருஅவைச் செய்திகள்!



## செயற்கை நுண்ணறிவு மனித மாண்பைப் பாதுகாக்க வேண்டும்

"செயற்கை நுண்ணறிவு மற்றும் மருத்துவம்: மனித மாண்பின் சவால்" என்ற தலைப்பில் நவம்பர் 10 முதல் 12 வரை வத்திக்கானில் இடம்பெற்றுவரும் மாநாடு ஒன்றின் பங்கேற்பாளர்களுக்கு அனுப்பிய செய்தியொன்றில் "நல வாழ்வு பராமரிப்பில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு அக்கறை மற்றும் உறவுகளின் தரத்தை உறுதி செய்ய வேண்டும்" என்று கூறியுள்ள திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் தொழில்நுட்பத்தை அதிகமாக நம்பியி-ருப்பது மக்களை ஒருவருக்கொருவர் தூர விலக்கும் ஆபத்தை ஏற்படுத்தும் என்றும் எச்சரித்துள்ளார். செயற்கை நுண்ணறிவின் மருத்துவ நன்மைகளை அங்கீக ரிக்கும் அதேவேளையில், உண்மையான முன்னேற்றம் மனித மாண்பையும் பொது நன்மையையும் மதிக்க வேண் டும் என்று வலியுறுத்தியுள்ளார் திருத்தந்தை. மேலும், நலவாழ்வுத் துறையில் பணியாற்றும் நிபுணர்கள் செயற்கை நுண்ணறிவைப் பொறுப்புடன் பயன்படுத்தவும், நோயாளர்களுடன் இரக்கம், தொடர்பு மற்றும் தனிப்பட்ட உறவுக்கு முன்னுரிமை அளிக்கவும் பங்கேற்பாளர்களை நினைவூட்டியுள்ளார். செயற்கை நுண்ணறிவுப் பயன்பாட் டில் பொருளாதார நாட்டங்கள் ஆதிக்கம் செலுத்துவதை எச்சரித்துள்ள திருத்தந்தை, அது உண்மையிலேயே மனித குலத்திற்கு சேவை செய்வதை உறுதிசெய்ய மருத்துவம், தொழில்நுட்பம் மற்றும் அரசியல் இடையே உலகளாவிய ஒத்துழைப்புக்கு அழைப்பு விடுத்தார்.



## துருக்கி மற்றும் லெபனோன் திருத்தூதுப் பயணம்-ஒரு முன் தூது!

திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள், நவம்பர் 27, வியாழக்கிழமை முதல் டிசம்பர் 2, செவ்வாய்க் கிழமை வரை 6 நாள்களுக்கு துருக்கி மற்றும் லெபனோன் நாடுகளுக்கு தனது முதல் திருத்தூதுப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.



## மீண்டும் ஆள்கடத்தல்!

நவம்பர் 24, திங்களன்று, ஏறத்தாழ 20 ஆயுதம் ஏந்திய நபர்கள் கொண்ட ஒரு கும்பல் நைஜீரியா வின் மேற்குப் பகுதியான குவாரா மாநிலத்தின் எகிட்டி உள்ளூர் அரசுப் பகுதியிலுள்ள இசாபா சமு கத்தைத் தாக்கியது என்றும், இத்தாக்குதலில், ஒரு கர்ப் பிணிப் பெண், 10 குழந்தைகள் மற்றும் இரண்டு தாய்ப்பாலூட்டும் அன்னையர்களும் கடத்தப்பட்டனர் என்றும் பீதேஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

துப்பாக்கிகளால் பல முறை சுட்டு, ஒரு வயதான பெண்ணுக்குக் காயமேற்படுத்திய இந்தக் கொள்ளை யர்கள், அப்போது எருகுவில் உள்ள கிறிஸ்தவக் கோவில் ஒன்றில் நேரலையாக ஒளிபரப்பப்பட்ட இறைவேண்டலில் கலந்து கொண்ட 38 வழிபாட்டா ளர்களைக் கடத்திச் சென்றனர் என்றும் அச்செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அந்நாட்டுப் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட முயற்சியினால் கடத்திச் செல்லப்பட்ட இந்த 38 பேரும் விடுவிக்கப்பட்டனர் என்று நவம்பர் 23, ஞாயிற்றுக்கிழமை அன்று தனது அதிகாரப்பூர்வ எக்ஸ்தள பக்கத்தில் கூறியுள்ளார் அதன் அரசுத் தலைவர் Bola Ahmed Tinubu.



## வறுமையில் தவிக்கும் குழந்தைகள்

குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளில் 41 கோடியே 7 இலட்சம் குழந்தைகள் அடிப்படைத் தேவைகளில் கடுமையான பற்றாக்குறையை எதிர்கொள்வதாகவும், 11 கோடியே 8 இலட்சம் பேர் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பற்றாக்குறையை எதிர் கொள்வதாகவும் அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளது யுனிசெஃப் நிறுவனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வினாவிடைப் போட்டி - 60 விடைகள்



1. தோபித்து தம் கண்களினால் கடவுளின் ஒளியைக் காணும் பொருட்டு அவருடைய கண்களிலிருந்து வெண்புள்ளிகளை நீக்கவும் தம் மகன் தோபியாவுக்கு இரகுவேலின் மகள் சாராவை மணமுடித்து அசுமதேயு என்னும் கொடிய அலகையை அவளிடமிருந்து விரட்டவும் இவ்வாறு அவர்கள் இருவருக்கும் நலம் அருள இரபேல் அனுப்பப்பட்டார்.
2. பேயாவது தீய ஆவியாவது பிடித்திருக்கும் ஒருவர் முன் மீனின் இதயத்தையும் ஈரலையும் புகையைச் செய்தால் அவர்கள் முற்றிலும் நலம் பெறுவார்கள். இனி ஒரு போதும் அது அவர்களை அண்டாது. வெண்புள்ளிகள் உள்ள மனிதரின் கண்களில் பித்தப்பையைத் தடவி ஊதினால் அவர்கள் பார்வை பெறுவார்கள் என்றார்.
3. அசீரியர்களின் மன்னரான எனமேசரின் காலத்தில் திசிபேயிலிருந்து நாடு கடத்தப்பட்டார். திசிபே வட கலிலேயாவில் ஆசேருக்கு வடமேற்கே தென் திசையில் காதேசு நப்தலிக்கு தெற்கே பெயேருக்கு வடக்கே உள்ளது.
4. முகவுரை

   தோபித்துக்கு நேர்ந்த சோதனைகள்

   தோபித்து பெற்ற கைம்மாறு

   தோபித்தின் புகழ்பாவும் அறிவுரையும்

   முடிவுரை
5. இது யூத போதகர்கள் கையாண்டு வந்த விவிலிய விளக்க முறையான "மித்ராஷ்" என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
6. அடிப்படைத்திறன்கள்
   - சிந்திக்கும் திறன்கள்
   - தகவல் பற்றிய அறிவு
   - பயன்நிறைவான தொடர்பாடல்
   - குழுச்செயற்பாடு
   - தொடர்ந்து கற்கும் பழக்கம்
7. அமெரிக்க எழுத்தாளரான ராபர்ட் பி டான்ஸ்

   முதல் பதிப்பு 1956
8. "எதிர் நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது" என்ற மையக்கருத்து
9. யோபேல் ஆண்டு என்று அழைத்தனர். யோபேல் என்பது ஆட்டின் கொம்பைக்கொண்டு எழுப்பப்படும் எக்காள ஒலி யைக் குறிக்கும்.
10. World Central Kitchen எனப்படும் அரசு சாரா அமைப்பு, கபீரியன் நாட்டின் Barbados பிரதமர் Mia Mottley. எத்தியோப்பியாவைச்சேர்ந்த ரூ, அமெரிக்காவைச்சேர்ந்த 15 வயது நிரம்பிய Heman Bekela ஆகியோருக்கு வழங்கப்படவுள்ளது.

## காலநிலை பேரழிவால் குழந்தைகள் தொடர்ந்து பாதிப்பு!

கடந்த 30 ஆண்டுகளில் குழந்தைகளைக் காப்பாற்றும் விதமாக பல்வேறு உறுதிமொழிகள் ஏற்படுத்தப்பட்ட போதிலும். ஒவ்வொரு நாளும் ஏறத்தாழ 1.36.000 குழந்தைகள் காலநிலை பேரழிவுகளால் பாதிக்கப்படுகின்றனர் என பிரேசிலின் பெலெம் நகரில் இடம்பெற்று வரும் COP30 எனப்படும் காலநிலை மாநாட்டில் கூறியுள்ளது Save the Children எனப்படும் உலகளாவிய குழந்தைகள் நல அமைப்பு.

காலநிலை மாற்றம் என்பது குழந்தைகளின் உரிமைகள் குறித்த நெருக்கடி என்றும். குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய நாடுகளில் உள்ள குழந்தைகளின் உடல்நலம். கல்வி மற்றும் எதிர்காலத்தை அளவுக்கு அதிகமாகப் பாதிக்கக்கூடியது என்றும் இந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

மேலும். எதிர்கால தலைமுறையினரைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கை அவசியம் எனவும் வலியுறுத்தியுள்ளது இவ்வமைப்பு.

– வத்திக்கான் செய்திகள்

### சரியான விடைகளை எழுதி பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்

**முதலாம் பரிசு: 1000/=**

ரொபினா றொபட்,
பிரதான வீதி,
ஆறுமுகத்தான் குடியிருப்பு,
தன்னாமுனை.

**இரண்டாம் பரிசு: 700/=**

மா. அருள்நங்கை,
13/171, காசிநாதர் வீதி,
பாலமீன்மடு.

**மூன்றாம் பரிசு: 500/=**

K. அனோமிக்கா,
6/45, சொறிக்கல்முனை - 03.

போட்டியில் பங்குகொண்டோர் - 05 பேர். அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயேசுவின் பிறப்பு (மத்தேயு 1:18-25)

**இ**யேசு கிறிஸ்துவின் பிறப்பையொட்டிய நிகழ்ச்சிகள் அவருடைய தாய் மரியாவுக்கும் யோசேப்புக்கும் திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. அவர்கள் கூடி வாழுமுன் மரியா கருவுற்றிருந்தது தெரிய வந்தது. அவர் தூய ஆவியால் கருவுற்றிருந்தார். அவர் கணவர் யோசேப்பு நேர்மையாளர். அவர் மரியாவை இகழ்ச்சிக்கு உள்ளாக்க விரும்பாமல் மறைவாக விலக்கிவிடத் திட்டமிட்டார். அவர் இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கும் போது ஆண்டவரின் தூதர் அவருக்குக் கனவில் தோன்றி, "யோசேப்பே, தாவீதின் மகனே, உம்மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்ச வேண்டாம். ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால்தான். அவர் ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர். ஏனெனில் அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்" என்றார். "இதோ! கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர்" என்று இறைவாக்கினர் வாயிலாக ஆண்டவர் உரைத்தது நிறைவேறவே இவை யாவும் நிகழ்ந்தன. இம்மானுவேல் என்றால் கடவுள் நம்முடன் இருக்கிறார் என்பது பொருள். யோசேப்பு தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து ஆண்டவரின் தூதர் தமக்குப் பணித்தவாறே தம் மனைவியை ஏற்றுக்கொண்டார். மரியா தம் மகனைப் பெற்றெடுக்கும்வரை யோசேப்பு அவரோடு உறவு கொள்ளவில்லை. யோசேப்பு அம்மகனுக்கு இயேசு என்று பெயரிட்டார்.

தொ.பே. இல: ....................................................................................................

(பரிசு அனுப்பவேண்டிய பங்கு: ....................................................................................

....................................................................................................

....................................................................

....................................................................: பூமஜரி

....................................................................: ரீாரு

-: ரூஹீர்ாஙிஜ

சேரல் :

**வர்ணம் தீட்டும் போட்டி - இல. 191**

தொண்டன்

அ.பெ. எண் - 44

மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுத்திகதி 10.01.2026

# சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 191



1. ஆண்டவரின் தூதர் யோசேப்புக்கு கனவில் தோன்றி கூறியதென்ன?

விடை: ..................................................................................................

..................................................................................................

..................................................................................................

2. இம்மானுவேல் என்ற பெயரின் பொருள் என்ன?

விடை: ..................................................................................................


3. அன்னை மரியாள் எவ்வாறு கருவுற்றிருந்தார்?


விடை: ..................................................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி
189 முடிவுகள்

**போட்டியில் பங்குபற்றிய மாணவர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுகள்....**







# எனக்கு அந்த லட்டு வேண்டாம்

ஒரு நாள் புத்தர் வீதியில் பிச்சை எடுத்துக் கொண்டு சென்றபோது ஒரு வீட்டில் அவருக்கு லட்டு ஒன்றை பிச்சையாகப் பாத்திரத்தில் இட்டனர். அதைக் கவனித்த ஒரு சிறுவன் லட்டைப் பார்த்த ஆசையில், ''ஹே கௌதமா, அந்த லட்டை எனக்குக் கொடு'' என்று கேட்டான். புத்தரோ அவனைத் திரும்பிப் பார்த்து. ''குழந்தாய், நான் உனக்கே லட்டைத் தருகிறேன். ஆனால், 'எனக்கு அந்த லட்டு வேண்டாம் என்று ஒரே ஒருமுறை சொல்' என்றார். அந்தச் சிறுவனும் அவர் சொன்னபடியே செய்தான். புத்தரும் அந்தச் சிறுவனுக்கு வாக்குறுதி அளித்தபடி, அந்த லட்டைத் திருப்பித் தந்துவிட்டார். புத்தருக்கும் அந்தச் சிறுவனுக்கும் நடந்த உரையாடலை ஒரு குடும்பஸ்தர் ஒருவர் கண்டார்.

ஒரு நாளைக்கு ஒரேயொரு முறை தான் புத்தர் பிச்சையெடுப்பார் என்பதையும், இந்த லட்டும் இல்லாமல் போனால், அவர் அன்றைக்குப் பட்டினி கிடக்க நேரிடும் என்பதையும் அவர் அறிந்திருந்தார். அவர் அந்தச் சிறுவனிடம் சென்று லட்டுக்குப் பதிலாக ஐநூறு பொற் காசுகள் கொடுப்பதாகவும் லட்டைத் திருப்பிக் கொடுக்குமாறும் கோரிக்கை விடுத்தார். அந்தப் பையன் அதற்குச் சம்மதித்து லட்டையும் திருப்பிக் கொடுத்ததான்.

''எனக்கு அந்த லட்டு வேண்டாம்'' என்று ஏன் அந்தச் சிறுவனிடம் சொல்லச் சொன்னீர்கள் என்று சீடர்கள் புத்தரிடம் கேட்டனர். ''பல ஆயிரக்கணக்கான பிறவிகளாக, அந்தக் குழந்தை ஆசைகளால் பீடிக்கப்பட்டு அடிமையாகி, மேலும் மேலும் அவற்றை விழைவதில் ஈடுபட்டுக் கொண்டே இருக்கிறது. பொருட்களைச் சேர்ப்பதில் இருக்கும் கவலையிலிருந்து சில நொடிகள் அவன் நீங்கியிருப்பதற்கு லட்டைக் காட்டியே அவனுக்கு ஆசை காட்டினேன். அவனைப் பற்றிப் பிடிக்கும் உணர்வுகளிலிருந்து சற்றே முன்வந்து முழுதுணர்ந்த அனுபவத்தை அதனால்தான் அவன் பெறமுடிந்தது.'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப அப்போஸ்தலிக்க பணிகள் வருடாந்த பொது அமர்வு
யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் பண்டத்தரிப்பில் அமைந்துள்ள பற்றிமா
தியான இல்லத்தில் இடம்பெற்றது.



வடக்கு கிழக்கு ஆயர்கள் மன்றக்கூட்டம் - 12.11.2025
வவுனியா திருக்குடும்ப கன்னியர் மடத்தில் நடைபெற்றது



கொக்கட்டிச்சோலை தூய பிரான்சிஸ் சவேரியார் ஆலய திருவிழா - 23.11.2025





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org